Contents

		Pages.
1.	தலையங்கம்	i
2.	Goldsmith	iv
3.	A. Thumb—Nail Sketch—by the Rt. Hon'ble V. S. S Sastri	1–3
4.	The President of the U. S A.	3–11
5.	School Boy howlers	11–14
6	School Gardens	14–16
7	கல்வியின் அவசியம்	17–18
8.	உறவு முறைச் சொற்கள்	19–22
9.	தற்கால (பெரும்பாலான) மாணவர்கள் ஒழுக்கநிலை .	23–26
10.	பள்ளிவாழ்விலே ஒரு பொன்னாள்	27–29
11.	எங்கள் உல்லாசச் செலவு	30–32
12.	மாணவர்களுக்குச் சில அறிவுரைகள் ...	33–35
13	வன போசனம்	35–36
14.	உத்தமர் காந்தியடிகள்	37–38
15.	பாம்புக்குக் கால்	38
16.	தாய் மொழி	39
17.	English Proverbs with Tamil equivalents ...	39–40
18	கனவில் கண்ட காந்தியார்	40–43
19	நகைவெடி—1	44
20.	விடு கதைகள்—1	44
21.	சிறுவர் செஞ்சிலுவைச் சங்கம்	45–48
22.	கலையும் களைப்பும்	48
23.	சாரணர் பாடி வாழ்க்கை	49–50
24.	மகிழ்ச்சிச் செலவு	51–52
25.	தமிழன் முரசே	52
26.	நகைச் சுவை—2	53
27.	விடுகதைகள்—2	53
28.	உல்லாசப் பயணம்	54–55
29.	விகடத் துணுக்குகள்	55

		Pages
30	செல்வராஜன்	56
31.	Obituary	57
32.	Masters' Educational Tour—(1952) ...	58–60
33	Sports and Games Review	60–62
34.	Old Boys' Association	62–64
35.	The Camera Club...	64
36.	School sports (1952-53)	66
37.	St. Peter's Republic (1952–53) ...	69
38.	Inter-house Tournaments	70
39.	List of S S L. C. Eligible Candidates 51–52	71
40.	திருச்சிராப்பள்ளி தமிழாசிரியர் கழகம் (S S. L C.) தமிழ்த் தேர்வு—1953 ...	72
41.	மாணவர் மன்றம், சென்னை, தேர்ச்சி பெற்றவர்கள்..	73
42.	The school Chronicle 1951–52	74–78

THE PETRINIAN.

ST. PETER'S HIGH SCHOOL MAGAZINE, TANJORE.

Vol. XIX.] [APRIL, 1953.

தலையங்கம்

நம் பள்ளி வெளியீட்டு இதழை உங்கள் கையில் கொடுக்கும் பேற்றைப் பெற்றமைக்கு பெரிதும் மகிழ்கின்றோம். இவ்வெளியீட்டிலுள்ள செய்திகளைக் கவனமாகப் படிப்பதில் சில மணி நேரங்களைக் கழித்துப் பயனடைவீர்கள் என நம்புகிறோம். இதில் பலவகைக் கவிதைகள், கட்டுரைகள், சிறு கதைகள் முதலியன உள. நீங்கள் அவைகளைப் படித்து இன்புறுவீர்கள் என்று உறுதியாக எண்ணுகிறோம்.

x x x x

இவ்வெளியீட்டிற்கு மாணவர்கள் ஆங்கிலக் கட்டுரைகள் ஒன்றும் கொடாதிருந்தது மிக வருந்தத்தக்கதாகும். நம் மாணவர்கள் தமிழ் மொழியில் சிறந்த நடையுள்ள கட்டுரைகள் எழுதியுள்ளது போலவே ஆங்கிலத்திலும் எழுதுவார்கள் என்பதைக் காட்ட எதிர் காலத்திலாவது இவ் வெளியீட்டிற்கு ஆங்கிலக் கட்டுரைகள் எழுதி யுதவுவீர்கள் என நம்புகிறோம்.

x x x x

நம் பள்ளி வழக்கம் போலவே மாணவர்கட்குக் கல்வியோடு தொடர்புடைய ஏனைய இன்றியமையாப் பயிற்சிகள் பலவற்றையும் அளித்து வருகின்றது. விஞ்ஞானம், ஒளிப்படம், கலை, மிதிவண்டி ஆகிய பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு வழக்கம்போல் சிறப்பச் செயலாற்றி வருகின்றன. நீந்துவதற்கும், கால் நடையிற்சென்று பல இடங்களைக் காண்பதற்கும் தனித்தனியே அமைக்கப்பட்ட குழுக்களும் செயலாற்றி வருகின்றன. மேலும் எம் பள்ளியில் சாரணர் குழு, நாட்டு மாணவர் படை (N. C. C.), பள்ளிக் காவற் படை (School Police) என்ற மூன்று

அணிகள் நிறுவப்பட்டுள்ளன. அவை, மாணவர்கள் உடற் கட்டுடையவர்களாயும், தன்னம்பிக்கையுள்ளவர்களாயும் வாழ உதவுகின்றன.

X X X X

தஞ்சை மாவட்ட ஆசிரியர் சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நம் பள்ளி முதல்வர் J. G. கோயிற்பிள்ளை B. A., L. T., அவர்களுக்கு எமது உளமார்ந்த பாராட்டுதலைத் தெரிவிக்கிறோம். அவர் காட்டும் வழியில், ஆசிரியர் சங்கம் நாளடைவில் வன்மையுடையதாக வளர்ந்து ஆசிரியர்களின் நிலையை உயர்த்தப் பெரிதும் முயன்று வெற்றி பெறுமாக.

X X X X

இவ்வாண்டு, நம் பள்ளி மாவட்ட ஓட்டங்களிலும், விளையாட்டுகளிலும் எதிர்பார்த்த வெற்றியடையவில்லை. இதிலிருந்து நம் நிலை குறைந்துவிட்டது என்று எண்ணுவது தவறாகும், நாம் சிறந்த போட்டியாளர்களைப் பெற்றிருக்கிறோம். அவர்கள் செய்த முயற்சிகள் பலவும் பாராட்டற்குரியன. ஆனால் நாம் ஆகூழ் (அதிர்ஷ்டம்) அற்றவர்களென்றே சொல்ல வேண்டும். ஒரே ஒரு மதிப்பெண் குறைவாகப் பெற்றமையால், மாவட்ட போட்டியில் உயர்ந்த வெகுமதியாகிய "மாரின் கேடயம் (Morin Shield)" என்பதை பெற நாம் தவறி விட்டோம்,

X X X X

அண்மையில் அடித்த புயல் நம் பள்ளிக்கு மிக அழிவை விளைவித்துள்ளது. நம் பள்ளியைத் தோற்றுவித்த தெய்வத்திரு. Rev. ஜி. யு. போப் ஐயர் காலம் முதல் வரலாற்றுத் தொடர்புடையதாய் பல ஆண்டுகளாக எழிலொடு நிழலும் தந்து இன்புறுத்திய மிகப் பெரிய அரசமரம் கீழே சாய்ந்தது. அரண்மனை விளையாட்டுத் திடலைச் சார்ந்த நம் பள்ளிக் கட்டிடங்களின் கூரையாகப் போடப்பட்ட கல்நார்ப் பலகைகள் (Asbestos sheets) யாவும் அடித்துக்கொண்டு போகப்பட்டன. கீழவாயில் கிளைப் பள்ளியில் ஏறக்குறைய மூன்னூறு கள்ளிக்கோட்டை ஓடுகள் சிதைவுற்றன. ஆகையால் திட்டமாக இரண்டாயிரம் வெள்ளி மதிப்புள்ள பொருள்கள் வீணாயின எனக் கூறலாம். கட்டிடங்களைப் பழுதுபார்க்க அரசாங்கம் தகுபொருள் கொடுத்துத் தம் உதவி செய்ய முன்வருமாறு வேண்டுகிறோம்.

X X X X

பாரத சாரண சாரணிகள் சங்கத்தின் தஞ்சைக் கிளைக்குழுவிற்கு நம் பள்ளி முதல்வர் உயர்திரு. J. G. கோயிற்பிள்ளை B. A., L. T., அவர்கள் யாவராலும் ஒன்றிய உள்ளத்துடன் உதவித் தலைவராகத் தேர்ந்தெடுத்தமையைக் குறித்து மட்டற்ற மகிழ்ச்சிகொண்டு பெரிதும் பாராட்டுகிறோம்.

தஞ்சை மாவட்டத்தில் தஞ்சைப் பகுதிக்கு உதவி சாரண ஆணையர் (Asst. Scout Commissioner) பதவியைப் பெற்றுத் தொண்டாற்றிவரும் உயர்திரு, G. தேவஇரக்கம் அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறோம். மேற் கூறிய இருவரும், தஞ்சை சாரண இயக்கத்தின் முன்னேற்றத்திற்குக் கடந்த பல ஆண்டுகளாகத் தமது தளரா ஆதரவைத் தந்திருக்கின்றனர், ஆதலால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட இவ்வுயர் பதவிகளை வகிக்க முற்றும் தகுதியுடையவர்களே என்பது ஒரு தலை.

X X X X

இவ்வெளியீட்டிற்குக் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், ஒளிப் படங்கள் முதலியவற்றைச் சீரிய முறையில் தந்து உதவி இதன் எழிலைப் பெருக்கிய யாவருக்கும் (மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள்) எமது மனமார்ந்த நன்றி

பதிப்பாளர்கள்.

Goldsmith.

Of dramatists great Shakespeare stands foremost
Of poets brilliant Milton commands all
Of essayists proud Addison outstrips all
Of novelists mild Dickens gets the most
Of our praise, regards, makes the most of wit
Of scholars surpasses Doctor Johnson
All in serious thought, views, and perception
All to the common English are remote.
But who in the midst of sore poverty
Did write good plays that split the sides of men,
Graceful essays with extravagant fun,
A pleasing novel and fine poetry
Even half an ounce of *Slip Slop* not with
But thou to whom they bow O, sweet Goldsmith ?

DAVID KOILPILLAI,
(Old Boy.)


By
S. CHIDAMBARAM
THE SENIOR PRINCE DECLARING THE
SPORTS MEET OPEN.

The Rt. Hon'ble Dr. V. S. S. Sastri, P.C., C H., L.L.D., D. Litt.

A Thumb-Nail Sketch.

By G. SANKARAN, B. A., L. T.,

TO us, Tanjoreans, the name of Mr. V. S Srinivasa Sastri is a household word. Nearly four score years ago, when a child was born to a poor Brahmin priest of Valangiman (a village near Kumbakonam) who could have predicted that the child was destined to become the silver-tongued orator of the British Empire one day? His life has a lesson for those who attribute their failure in life to cruel fate. Born without the proverbial silver spoon in his mouth, he worked his way up with untiring zeal He was not born great. Greatness was not thrust upon him. He achieved greatness by his own ceaseless efforts In spite of abject poverty he graduated from the Cambridge of South India. Even now one can see his portrait adorning the main hall of the Kumbakonam College.

He started life as a school-master. I once eulogised him for choosing the teaching profession in preference to several other more lucrative professions. His reply was characteristic of him "You make a mistake when you say that I chose the teaching profession. After I qualified myself for the B A. Degree, I had to earn my bread. I had many mouths to feed. I knocked at many doors None was open to me. So I took to this profession But having been a teacher all these years, I have come to love the profession with all my heart and soul."

He was well-settled in life and living comfortably as a Head-master He sprang a surprise on his wife by deciding to join the "Servants of India Society". His wife was opposed to that move and begged him with tears in her eyes not to give up his post. "Tears are hard arguments to answer," he writes, ' But nothing could stand in the way of my joining Mr. Gokhale's. Society."

He was a sincere friend and warm admirer of the Saint of Sabarmati. The friendship that linked Mr Sastri and the Mahatma was remarkable; for the former was a moderate of moderates who swore by constitutional methods of agitation for attaining 'Swaraj,' while the latter was a 'philosophic anarchist' as Mr. Sastri once described him. It was the Mahatma who described Mr Sastri as a "man of unimpeachable integrity" and recommended his name when the Government of India wanted to send a distinguished gentleman as India's first ambassador to South Africa. It is an eloquent testimony to Mr. Sastri's statesmanship that throughout his stay in South Africa he enjoyed the unstinted support of Gandhiji on the one hand and the support and confidence of the then Government of India on the other — a remarkable achievement indeed! Mr. Sastri was Gandhiji's 'guru', and corrected with meticulous care all the mistakes in grammar, idiom, and syntax, which the Mahatma committed During his last visit to Madras, Ghandhiji went to see Mr. Sastri, who was then ailing in the hospital. He was with Mr Sastri for over an hour. Just before leaving the Mahatma he remarked, "I have spent an hour with you and you have done all the talking." Mr Sastri quickly retorted, "Once a teacher always a teacher,".

His love of learning was unique. I went to seek his blessings early in the morning on a Deepavali day. What was my surprise when I saw the septuagenarian, with a world-wide reputation for his matchless command of English, reading the Webster's Dictionary! He was not referring to the meaning of any particular word, but just perusing his '*vade mecum*'.

Contrary to the popular belief, he never made any public speech of importance without adequate preparation. Among his numerous speeches which I was privileged enough to hear and admire, I would unhesitatingly put down his Kumbakonam speech on 'Freedom' as the most impressive. I recall, with grateful thanks, his kindness in bringing me down to Kumbakonam along with him. Fortunately this speech of his has been published in the form of a booklet and can be had of the

Kumbakonam Parliament. No doubt the speech in cold print lacks the personality of the speaker, but even as it is, it bears the stamp of a master-mind that could deal exhaustively and with academic detachment any subject that it chose to deal with.

Even trivial mistakes seldom escaped his notice. Once when I wrote his name as the Rt Hon'ble Dr. V. S S. Sastriar he scored out the ' ar ' in his name with a gentle smile and without a word.

Even in this materialistic age, he did not hanker after riches. The spirit of renunciation was so strong in him that when Lord Wellingdon, the then Viceroy of India, offered him a well-paid sinecure, viz the Presidentship of the Council of State, Mr. Sastri declined the offer in his own inimitable language One more anecdote from his life will bear out this point. He was made a member of His Majesty's Privy Council. He had to take the customary Oath in the presence of His Majesty, dressed in specially prescribed robe. The robe could be hired from a London monopolist. When Mr. Sastri approached him, the monopolist demanded an exorbitant hire. It was far beyond Mr. Sastri's slender means. He explained his difficulty to His Majesty's Secretary. His Majesty was graciously pleased to waive the rule in Mr. Sastri's favour, and Mr. Sastri took the Oath dressed in his usual closed coat and characteristic white turban

---

The President of the U. S. A.
OR
The Executive in the U. S. A.

BY D. RELTON, M. A., B. T.,

1. Introduction.

THE Government of the U. S. A. follows the pattern of the Presidential Government. In the Presidential form of Government, the executive is constitutionally independent of the legislature and is not responsible to it for its acts. The

constitution empowers the executive with welldefined powers. Under this system, the chief executive head is not merely a titular executive, but he is the real executive and he exercises all the powers which laws and the constitution confer upon him So, he is best comparable, in respect of powers, with the English, the French, and the German Premier rather than with the English king, the French or the German President.

2. How the President is elected.

The President is the executive head of the U. S. A. in name as well as in fact. According to the actual terms of the constitution, he is to be elected neither by the members of the Congress nor by direct popular vote but indirectly by a number of electors chosen by the people. The framers of the constitution were against the system of direct popular election because in their opinion that might lead to the election of demagogues. So they provided for indirect election. The people of each State elect a number of Presidential electors, equal to the number of its representatives in both the Houses of the Congress. Every adult, whether male or female is entitled to vote in this election. The members of the Congress or the holders of any federal office cannot be chosen as electors. These electors then meet in each State on a date fixed by law and cast their votes in writing for the President and the Vice-President. The votes are then sealed and sent to the capital where the President of the Senate counts the votes in the presence of both Houses and announces the result. The election is usually finished by the first week of January. The new President assumes office on the 20th January after his election.

But the intention of the fathers of the constitution has been defeated by the growth of party system in the U. S. A. The electors are chosen on party lines and they are under a pledge of honour that they shall vote for their party nominee. Since it is known beforehand for which candidate each elector will vote, with the election of the Presidential electors the result of the presidential election is determined. Thus by the

growth of a convention, the power of electing the President has been transferred to the people.

The President is elected for a term of four years and there is no restriction on his re-election as many times as he can obtain the confidence of the people. Only recently the constitution has been amended and the amendment disallows any President to stand for election for more than two terms. Ever since George Washington, the first President, refused to stand as President for the third term, a tradition grew up that the President should not seek election for the third term. But recently with the election of President Roosevelt for the fourth time in succession, this tradition was broken

No one is eligible to be a President or a Vice-President unless he is a national born citizen of not less than thirty-five years and unless he has been a resident of the United States for at least fourteen years. The salary and allowances of the President are fixed by the Congress, but they cannot be either increased or decreased during the term for which he is elected. His salary and allowances now amount to more than three hundred thousand dollars. In case of removal of the President from office or of his death, resignation or inability to discharge the powers and duties of the said office, the office devolves upon the Vice-President.

During his term of office, the President is irremovable except by an impeachment. The President can be impeached for treason, bribery or other high crimes and misdemeanours by the House of Representatives. He can be tried by the Senate with the Chief Justice of the Supreme Court as the President and a two-third vote is necessary to convict him. During his term of office, he is immune from the jurisdiction of the ordinary courts.

3. Presidential Powers and Functions.

(a) Four sources of his power:

The sources of presidential powers are four in number The first source is the constitution which clearly defines his powers

and privileges and these are not liable to be interfered with by the Congress. The second source of his powers is the numerous judicial decisions which have defined the scope of Presidential powers in cases where the constitution is not clear. The third source of his powers is the Congress which, by statutes, delegates authority to him which would not otherwise belong to him. Usages have, fourthly, increased the powers of the President to a certain extent.

(b) His Executive Powers:

The constitution enjoins the President to "take care that all laws be faithfully executed" The President is thus authorised to appoint all administrative officials as well as the judges of the federal courts. The higher officers are appointed by the President with the advice and consent of the senate The higher officers include members of the Cabinet, all ambassadors, ministers and consuls, judges of federal courts and members of the various federal commissions. The appointment of minor officers is vested mostly in the President and their recruitment is generally controlled by civil service regulations As regards the higher appointments, though the constitution requires that the advice of the Senate will be taken, yet the advice is seldom taken. In the appointment of higher officers, an unwritten rule named 'Senatorial courtesy' exerts a great influence. Stated briefly, this is the practice of refusing to confirm the nomination of any local officer, such as a postmaster or collector of internal revenue, unless the nominee is satisfactory to the Senator or Senators from the state concerned, provided of course that the Senators are of the same political party as the President himself. The President, as a rule, consults the Senators of his party in the matter of appointment to higher posts because he needs their support on numerous occasions.

The President may, if he likes, evade the Senate's confirming power. He may fill temporarily any vacancy that may occur during the recess of the Senate. It is then submitted to the Senate, the appointment may hold good till the end of the Session. Upon its refusal to confirm, the same person may be

reappointed at the end of the Session and so on President Coolidge made use of this in retaining the Attorney General Mr Warren, in office. The President has also the power to remove any person from office

(c) His powers as the Commander-in-Chief :

The President is the Commander-in-Chief of the armed forces and as such he is empowered to do anything to overcome the enemy. This power was used by Lincoln to suspend Habeas Corpus in Councils, Provincial and Imperial and Official majority was still maintained. Again in the Great War, President Wilson obtained and used powers commensurate with almost every particle of national life.

(d) The President and Foreign affairs:

As regards foreign relations, the President appoints and receives all ambassadors, and conducts international relations through them. He has the power to make treaties but these must be ratified by the Senate by a two-third vote. But agreements of a minor nature can be made and ratified by him without the intervention of the Senate Thus by the exercise of this power, many controversies of international importance were settled. In order to avoid Senate's interference Presidents have employed certain methods to acquire foreign territory without a treaty. Texas was thus annexed So also the Hawaiian Islands, Santo Domingo and Haiti. The Congress has the power to declare war, but the initiative is always taken by the President. The President may conduct diplomatic relations in such a way that the Congress will have no alternative but to declare war. The President alone has the power to suspend and terminate hostilities.

(e) His judicial powers:

The President is empowered by the constitution to grant reprieves and pardons. He can pardon all offenders against federal laws except one who has been impeached. But he has no authority to grant pardon for offences against the law of the component parts.

(f-a) Legislative Powers:

The legislative powers of the President are not large. The fathers of the constitution tried to follow the theory of separation of powers and clearly defined the provinces of the executive and the legislature.

The President does not possess the power of summoning the Congress except in special sessions. He cannot adjourn, prorogue or dissolve any of the Houses of the Congress He does not personally address the members of the Congress though Washington followed this practice. He cannot initiate any Bill in the House.

But in course of time, the legislative leadership has devolved upon the President to a certain extent. He exercises his influence in legislation in the following ways (1) He may summon extraordinary sessions of the Congress. (2) He may send messages to Congress or deliver them in person as Wilson did effectively. The constitution requires the President to give to the Congress from time to time information on the state of the Union and recommend to their consideration such measures as he shall judge necessary and expedient. This power of the President to send messages is utilised in impressing upon the Congress and the country the necessity of any legislation in any department (3) He may ask a member of Congress to embody his ideas on a certain subject in a bill and set the party machinery in motion to get it accepted The effectiveness of this depends primarily on whether the party to which the President belongs commands a majority in the Congress (4) The President has been given the power to veto any measure passed by the Congress but it must be done within ten days (Sundays excepted) after the bill has been submitted to him. But if the vetoed Bill is repassed by a two-third majority in both the Houses, it will become an act in spite of the veto. This is an effective power to prevent hasty and unwise legislation and has been frequently used—indeed as many as six hundred times. In certain circumstances, this suspensive veto may become an absolute veto, that is, without a chance for the Congress to repass the vetoed bill by the required majority. This happens


MASTERS' EDUCATIONAL TOUR MAY 1952
THE PARTY AT 'GOPAL BAGH' WITH
THE PARTY AT THE ARCUS HOSTEL, COIMBATORE
By S.R.P.
SAGAR DAM
By S.R.P.
14/5/52 TO 20/5/52
THE METTUR DAM

when the Congress adjourns before the ten days which are allowed for the President to study the bill are up and the President refuses to sign the bill. This is termed 'a pocket veto'.

(f-b) 'Executive Orders':

The President has also obtained considerable legislative power in another way. Within the last few decades the practice of determining many matters by means of 'executive orders' has developed in the U S A and these orders have the force of law. A large ordinance-making power has been developed in the matters of tariff arrangements of public lands and in various other matters. Thus considerable legislative powers have devolved upon the President and his subordinates

(g) The Jackson-Lincoln Theory of Presidency

From a review of the executive and legislative powers vested in the President, we come to the conclusion that he really governs his country. The framers of the constitution intended to create a strong executive and they knew that the only means of creating a strong executive is to concentrate executive powers in one person and this the fathers of the constitution did in practice.

The Great War demonstrated the strength of the American Presidency. Roosevelt was the first exponent and practitioner of what he himself called the Jackson-Lincoln theory of Presidency namely that, "Occasionally great national crises arise which call for immediate and vigorous executive action and it is the duty of the President to act upon the theory that he is the steward of the people and that the proper attitude for him to take is that he is bound to assume that he has the legal right to do whatever the needs of the people demand unless the constitution or the laws expressly forbid him to do it."

The President is the nearest and the dearest substitute for a royal ideal which the American possesses. Political snobbery is also responsible for the growth of the habit of looking upon the President's wife as the first lady of the land.

(h) The President and the Press :

The President has also been able to add to his prestige and to cast Congress into the shadows by his relationship with the Press. By this means, he takes the lead in legislative policy, sets the people against the Congress and wins the confidence of the people.

4. The President and the Cabinet.

America does not possess any cabinet in the English sense. The members of the President's cabinet are not members of the Legislature nor have they powers of initiative in legislation nor are they responsible to the Congress. The American cabinet is not recognised by the constitution, but usage is responsible for the growth of the cabinet. Thus the American cabinet, like the English cabinet, is based upon convention and usage.

The constitution does not mention a cabinet for the purpose of collectively formulating the policy of the nation. It authorises the President only to require the opinion, in writing, of the principal officer in each of the executive departments, upon any subject relating to the duties of their respective offices. By convention, it has been usual for the President to summon meetings of the heads of the executive departments for the discussion of important governmental matters.

The President's cabinet contains ten heads of departments. He can select whom he pleases. The members of the cabinet are not his colleagues, but his subordinates. The cabinet, as a body, has no constitutional powers. It meets once or twice a week under the Presidency of the President to discuss important matters. But no vote is taken on any question. It is more or less an advisory and deliberative body. The proceedings are informal and confidential. Cabinet discussions are useful in clarifying views and helping the President to make up his mind, but he is not bound by any decisions arrived at. His responsibility remains single and undivided. President Lincoln is said to have remarked " Seven nays, one aye—the ayes have it ", when he found in a cabinet consultation that all the members of the cabinet were against him.

5. Conclusion.

The Presidency of the U S. A. is one of the greatest political offices of the world. Its occupant has become—with the exception of certain of Europe's dictators—the most powerful head of a government known to our day. His public pronouncements and actions are watched with the greatest interest throughout the world. Unlike the King of England and the President of France under the Republic, his power is real, being exercised on his own responsibility. As Sir Henry Maine has aptly said, the king of England reigns but does not govern; the French President neither reigns nor governs; the American President governs, though he does not reign The people look up to him for leadership.

School Boy Howlers.

By S. R. Pandyan, B. A., L. T.,

A howler can be defined as a glaring blunder or a very stupid mistake. People who have the good fortune or rather the misfortune to correct answer papers come across blunders of various kinds. Some of these blunders are very funny and make us laugh. Such humorous incorrect answers found in answer books are usually called "School boy howlers." Such howlers are very common in History, Geography and Science answer papers. They are often published in the reports of examiners and even find a place in the newspapers and magazines.

I had the privilege of correcting the English paper in the recent S. S. L. C. Selection Examination in our School. As usual, I came across very interesting answers—some of them definitely school—boy howlers. My intention in reproducing them here is not to display the awful ignorance of our pupils in the use of English idioms and words. but just to let us have a hearty laugh over them.

Here are a few examples taken from the "letter" question:

The railway officers gave us *consumption*. (Of course the pupil means "concession".)

x x x

The *breath* of the Mettur Dam is one mile. (Can the Dam breathe, I wonder?)

x x x

I hope there was a *good cyclone* in your town. (An impious hope indeed!)

x x x

The cyclone *ran* two hundred and eighty miles per hour.

x x x

The cyclone *was held on* 30—11—52 for 22 hours.

x x x

The cyclone blew at 2 P. M. *in the noon* on 30—11—52.

x x x

The electric post fell on my house. *Unfortunately* there was no electric current.

x x x

The electric posts were damaged *very well*. (The writer owes the Municipality a grudge, to be sure.)

x x x

The T. B. is a very dangerous disease. The Doctor told you to go to Sengipatti. *The disease is not dangerous in Sengipatti*. (The disease is very partial to Sengipatti.)

x x x

I introduce to you the news of my brother's illness. (A nice introduction indeed!)

x x x

Then I took him to the hospital. The doctor gave him some *tables* to swallow

x x x

Now the illness is good. (The pupil wants to say that the patient had recovered.)

x x x

In the news paper many people died in Negapatam.

x x x

Some people *gave their lives* to the cyclone.

x x x

But for two days father had no sleep *in his eyes.*

x x x

Here are some more taken from the questions relating to the Non-detailed texts.

x x x

There he saw a *naked man with no clothes on.*

x x x

No. The boots did not get ready.

x x x

Simon was frightened and *passed away.* (Surely he did not die, but passed by.)

x x x

She told the angel that her husband *must be buried* by a falling tree. (had been killed)

x x x

He knew that death was not allowed to man.

x x x

The woman did not give a soul to Michael.

x x x

Simon's wife gave some bread and milk *in a kindly face.*

x x x

He gave orders for boots *without changing the shape.* (Whose shape ?)

x x x

They were food and clothes to Michael.

x x x

Michael's clothes *went on him.*

x x x

Michael saw the child born without father or mother. (It must be a divine child)

x x x

The boots got ready for the dead body.

x x x

He came to the earth *to bring up* the life of a woman.

x x x

Malasha stepped out of the water and started *to run her home.*

x x x

Akalya's dress was splashed *with her nose and eyes.*

x x x

The old woman told the parents about the *senses* of the child.

x x x

A huge wave came and the ship was *drowned* in the sea.

x x x

Uriah Heep went to his room and *trained* Wickfild's signature.

x x x

David saw the sea shore being broken into pieces.

x x x

One day the great storm *waved* the sea.

x x x

At that time Harm jumped into the sea and *sailed.*

School Gardens.

By K. Krishnamoorthy. B A., B. T.,

FEW avocations afford so much pleasure as gardening, whether we regard it as a hobby or as a piece of business. Lord Bacon has said " Gardening is the purest of human pleasures, and the greatest refreshment to the spirit of man." Dean Hole, an enthusiast in horticulture asks himself the question. Which of all the amusements and recreations in life, brings the longest and largest happiness ? After weighing the relative merits of several of them such as shooting, hunting, fishing, rowing, racing, cricket, billiards and tennis, he concludes, "All English sports and games, I have ' loved ' and love ; and yet they satisfy not my present need—But gardening gives something more continuous than these—something which may occupy the thoughts and employ the actions of my leisure, not in summer only as the cricket, not in winter only as the chase, but alike in every season of the year ; and more than this through all the different phases of my life—youth, manhood and old age. Everyday brings to a gardener its special interests There is always something worthy of his care and admiration,

some new development of beauty, some fresh design to execute; some lesson to learn, some genial work to do—And not only is the gardener's happiness in its duration sure, but it is in its peculiar essence, of a very sweet and gracious quality. It ministers health to the body It ministers health to the mind. It brings pure air to the lungs and pure reverent thoughts to the heart It makes us love our home, content and satisfied with those pleasures which neither sting nor pall; and yet when we leave our home, it follows us wheresoever we go."

Gardening happens to be one of those luxuries that is not restricted to the upper classes. The rich may spend fortunes on conservatories, extensive lawns, costly adornments and rare specimens; while the poor may have about their houses only a few plants. But still, the enjoyment that each derives may be the same. The garden makes the home dear to each of them, and helps them to be content by satisfaction ever new. Some persons maintain a garden, just because they think it is a fashion to do so and they leave everything to the gardener, taking no personal interest in it themselves. There are others, however, who maintain a garden because of their true love of plants, protect them from the inclemencies of the weather and carefully watch them grow. It is needless to say that the latter class of persons alone enjoy the happiness of a garden most.

As things are at present, many a house owner does not have a garden and even if he has one, he often does not know when and how to sow a seed or how to plant a tree. He is entirely at the mercy of the gardener. This is to a great extent due to the fact that no earnest endeavour is made in our schools to encourage in our children a taste for Art and a love for Nature. Horticultural instruction in our schools would largely add to the comforts of society as a whole, because the children of today are future citizens of India and may some day have gardens of their own.

School Gardening is an extension or practical application of Nature Study, in which the pupils are brought face to face with

Nature. It develops the "seeing eye" and "the understanding heart" and encourages the scholars to look upon Nature as an "ally" in their endeavour to cultivate plants. It also inculcates in the minds of the pupils a fine team spirit or group activity. It gives them a sense of the beautiful and makes them self reliant, giving them scope for gaining knowledge through personal observation and activity ; which is impossible to have in class rooms. Further, the garden offers means for a number of hobbies, like bee-keeping, flower-growing, vegetable culture and so on.

Work in a garden leads to a careful nurture of the creative faculty of the mind. As one deals with "Life process", new situations present themselves often. The mind is exercised on such occasions to think—so that originality is developed. Manual dexterity is promoted to the utmost—resulting in directness in observation and acuteness of vision. Because one is always dealing with vital results, the reasoning is always of a concrete type. There is a sense of responsibility inculcated, together with respect for others' property. "Dignity of Labour" is impressed upon the minds of the pupils. The leisure time of the pupils is spent in the garden and no scope is offered to them for wrong thoughts. A better link is established between the teacher and the pupils, besides respect for the institution. Open air exercise and manual work in the garden lead to the promotion of bodily health also.

A well-kept garden is the pride of the school. A stable and immovable garden is certainly a necessity in these days of hanging and floating gardens. If only gardens are laid out in the premises of our educational institutions and the boys and girls are taught to work in them and reap their own harvests, we shall have in the course of a single generation, very few idlers who won't have gardens and very few ignorent men and women who don't know how to use them. Everything depends upon the enthusiasm of the teachers and the heads of educational institutions.

———


NATIONAL CADET CORPS.
By W.M. SCHWARTZ.
By W.M. SCHWARTZ
By W.M SCHWARTZ
By W.M. SCHWARTZ
LECTURE ON CLEANLINESS.
PRESENT ARMS

கல்வியின் அவசியம்.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே." என்பது ஆன்றோர் வாக்கு.

மக்கள் எந்நிலையிலிருந்தாலும் கல்வி அவசியம் வேண்டும் என்பதுதான் வற்புறுத்தப்படுகிறது. ஏன்? கல்வியே மனிதனை மனிதனாக்குவது கல்வியே மடமையைப் போக்கும் மாபெருங் கருவி. கல்வியே கடவுளின் பெருமையைக் காணச் செய்யும் கைக்கண்ணாடி. கல்வியே கன்னெஞ்சையும் கரைக்கக்கூடிய ஆற்றல் உடையது. கல்வியே நம்முன்னோர்கள் வைத்துப்போன இலக்கிய இன்பத்துள் இழுத்துச் செல்லும் ஏந்தல். கல்வியைக் கள்வர்களும் கவர்ந்துபோக முடியாது. நெருப்பும் நீறாக்க முடியாது. கல்வியைக் காவாது கொடுத்தாலும் கரையாது. கல்வியே மனிதன் வாழ்க்கைக்கு உற்றதுணை.

கல்லாதவனைப் பதருக்குச் சமமாக சொல்லப்பட்டிருக்கிறது. பதர் என்பது மணியைத் தன்னுள் பெற்றிலாத போலி நெல். அதற்குள் உயிர் இல்லை. இனப்பெருக்குச் சக்தி கிடையாது போலி உருவத்தை யுடையது. பயனுள்ள பொருள்களோடு சேரும்போது அவற்றின் மதிப்பைக் குறைக்கக்கூடியது. ஆனால் காற்றில் தூற்றும்போது பறந்தோடிப்போகிறது. ஆனால் நல்ல மணியோ கனமுடையது. மேனி யுடையது. உயிருடையது. இனப்பெருக்குச சக்தியுடையது. மக்களுக்குப் பயனளிக்கக் கூடியது. நல்ல சூழ்நிலை ஏற்படும்போது உயிர்பெற்றுச் செழித்து வளர்ந்து ஒன்று நூறாகப் பயன் தரக்கூடியது. அதுபோலக் கல்லாதவன் வெறும் என்புதோல் போர்த்த உடம்பினை யுடையவன். அவனால் உலகிற்கு ஒரு பயனும் இல்லை ஏன்? உலகிற்கே பாரமாகத் தான் இருக்கிறான். ஆனால் கற்றவனோ தான் பெற்ற கல்வியினால் அறியாமை நீங்கி அறிவு பெற்றவனாகிறான். இயற்கையை உணரக் கூடியவனாகிறான் இயற்கையோடியியைந்து இன்புறும் தன்மையடைகிறான். இயற்கையின் வல்லமைகளைக் காண்கிறான். அவற்றைத் தனக்கும் தன் னினத்துக்கும் பயன்படுமாறு உழைக்கிறான். கடவுள் தன்மையை நிலை நாட்டுகிறான்.

அப்படியானால் கல்வி கற்பதில் நோக்கம் இருக்கவேண்டும். சில பள்ளி மாணவர்களைப்போல பொருள் உணராமல் மனப்பாடம் செய்து

விட்டால் படிப்பு ஆகாது. அதனுல்தான் தமிழ்ப்பெரும் புலவர், "கற்கக் கசடறக் கற்க—கற்றபின் நிற்க அதற்குத்தக" எனக் கூறுகிருர்.

படிக்கவேண்டிய நூல்களை ஐயந்திரிபறப் படிக்கவேண்டும். பின் அவற்றை வாழ்க்கையில் பயன்படுத்தவேண்டும். அதாவது தான் கற்ற கல்வி தன் வாழ்க்கையில் பிரதிபலிக்கவேண்டும். அப்படிப்பட்டவர்கள்தான் படித்தவர்களாகக் கருதப்படுவார்கள், அப்படியில்லாமல் "படிப்பது ராமாயணம் இடிப்பது பெருமாள்கோவில்" என்பதுபோலப் படித்த மக்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் தாங்கள் கற்றதை மறந்து "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என்று தான்ருேன்றிகளாயிருந்தால் அவர்களை மக்கள் என்று சொல்வது எங்ஙனம் ?

கடவுளின் படைப்புக்குள் எல்லாம் ஒன்று. அவற்றுள் ஏற்றத் தாழ்வு கிடையாது. மக்கள் நட்புக்கொண்டு வாழவேண்டும் ஒருவர் அடையும் மகிழ்ச்சியில் மற்றவர்களும் பங்கு பெறவேண்டும். மாற்ருன் நலமே தன்னலமெனக் கருதவேண்டு மென்ற மேலான நீதிகளை யெல்லாம் படித்திருந்தும், அவற்றைக் கடைப்பிடிக்காததினுலல்லவோ இன்று நாட்டில், என் உலகிலேயே தன்னலம் தலைவிரித்தாடுகிறது. அதன் காரணமாகப் பஞ்சம், பட்டினி, பிணி, பகை, பொருமை என்ற பலவகைப் பயங்கரப் பேய்கள் நம்மைப் பிடித்தாட்டுகின்றன. விஞ்ஞானிகள் தாங்கள் கண்ட புதுமைகளை மக்களின் அழிவிற்கே பயன்படுத்துகிருர்கள் ! உலகமே உய்யும் வழிகாணுது உழன்று தவிக்கிறது !!

உலகம் உய்யவேண்டுமானுல், மக்கள் சுகம் பெறவேண்டுமானுல் உண்மைக் கல்வி அவசியம். உண்மைக் கல்வியே மனிதனுக்கு உற்ற துணை "........... கல்வியி னூங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை" என்ற ஆன்ருேர் வாக்குப்படி கல்வியைக் கசடறக்கற்றுப்பின் அதன்படி நின்று இன்புறுவோமாக.

கல்வியே அறிவை வளர்க்கும்.
அறிவே ஒழுக்கத்தை உண்டாக்கும்.
ஒழுக்கமே அறத்தை நிலைநாட்டும்.
அறமே அன்பை யூட்டும்.
அன்பே இன்பத்தைக் கொடுக்கும்.

இன்பம் அனுபவித்தலே இம்மானிட வாழ்க்கையின் நோக்கமாகும். எல்லோரும் இன்புற்றிருக்க இன்னுயிர்க் கல்வியை ஏற்போமாக.

G. தேவஇரக்கம்
முதியோர்க் கல்வி ஊழியன்.

உறவு முறைச் சொற்கள்.

இக்காலத்தே கற்றவர்களின் தாய்மொழிப் புறக்கணிப்பு, விடுதலை பெற்ற நாட்டிலும் வருந்தக்குரிய நிலையில் ஓரளவிற்குக் காணப்படுகின்றது. கற்றவர்களில் சிலரின் போக்கு, இவரினும் கல்லாதவர் நனி நல்லர் என்று எண்ணுமளவுக்குப் போய்க்கொண்டிருக்கிறது! ஏனெனில் இன்று கல்வியறிவில்லாதோரும் சிற்றூர்களில் வாழ்வோருமாகிய எளிய மக்கள் தாம் தூய தாய்மொழியில் பேசுந்திறமுடையோர் ஆவர். சில சொற்களின் செம்மையான தமிழ் வடிவத்தைக் காண விரும்பினால் அங்குதான் அவரிடஞ் செல்லவேண்டும்.

அத்தகைய மக்களின் வாழ்வும் நகரில் நடைபெற வேண்டிய நிலை ஏற்படின் தீங்கே! தீங்கே!! ஏனையோர் தொடர்பால் சிற்றூரிலிருந்து வந்தவர்களும் தூய்மையை மறந்து வடுப்படுத்தத்தொடங்கி மொழியைச் சிதைத்து விடுகின்றனர். சென்னை போன்ற பெரிய நகரில் வாழும் ஏழைத் தொழிலாளர்கள் பல சொற்களைச் சிதைத்து உருவத்தையே மாற்றி விடுகின்றனர். பலமொழியாளர் வாழும் நகரமாதலின் பலரும் குறிப்பாகப் படித்தவர்கள், வணிகர்கள் முதலியோர் வீண்பெருமை கொண்டாடக் கருதிப் பிறமொழிச் சொற்களைத் தமிழில் கலந்து பேசுகின்றனர். தூய நடையிலே வளஞ் செறிந்த மொழியினை நன்கு எழுதலாம்; எடுத்துக்கூறலாம்; என்ற உண்மையை எல்லாரும் உணரவேண்டும். மொழியிலே நல்ல புலமையுடையவர்கள் அவ்வாறே செய்யவேண்டும் என்று உறுதியாகப் பின் பற்றியுள்ளார்கள். இத்துறையிலே நன்குமுயன்று முழுவெற்றிகண்டவர் மும்மொழிப் புலவராகிய மறைமலை யடிகளாரே ஆவர். வளர்க அவர் தம் முயற்சி; மறைந்த அவர் தம் நெறியைப் பின் பற்றுவோர் தொகை நாளும் பெருகிக் கொண்டிருக்கிறது, நல்ல அறிகுறிதான்!

அடுக்கு மொழியில்—எதுகை மோனையில் பேசுதற்காகப் பிறசொற்களைப் பெய்து பேசுவோரும், எழுதுவோரும் உள்ளனர். இவர்கள் சங்க நூல்களையுங் குறிப்பாகத் திருக்குறட் பாக்களையும் பயின்றால் தெளிவு பெறலாம்.

இவ்வகையில் உறவு முறைச் சொற்களை நல்ல முறையில் வழங்குவோர் தமிழ்ப் பற்றுளரும், எளிய மக்களுமேயாவர். ஏனையோர் செயல் வருத்தந் தருவதாகும்! இது பற்றியே தற்காலத் தமிழ்க் கவிஞர் ஒருவர் "தமிழ் நாட்டில் தமிழ்த் தெருவில் தமிழ்தானில்லை" என்று கண்ணீர்

வடிக்கிறார்! ஆகவே இக்குறைகளை நீக்கும் முயற்சியில் தமிழிளைஞர் இடையறாது ஊக்கமுடன் உழைக்க வேண்டும். உறவு முறையைக் குறிப்பிடத் தமிழில் தூய, இனிய, எளிய, பொருள் பொதிந்த சொற்கள் பலவுள்ளன. நாம் இத்தகைய நல்ல சொற்களை யெல்லாம் மறந்து கொண்டிருக்கிறோம்! சுற்றத்தைக் குறிக்க தமிழில் பின் வருஞ் சொற்கள் வழங்குகின்றன. அவை உற்றவர், இருளை, எக்கல், கிளை, உறவு, கேள், குடும்பம், கடும்பு என்பனவாம். இவற்றை யெல்லாம் நாம் கைவிட்டால் நம் வழி வருவோர் நம்மைப் பழிப்பர்; பழிப்புக் கிடந் தேடாதீர்; விழிப்புற்று வினைசெய்வீர்; வெற்றி பெறுவீர்! அட்டவணையிற் காணப்படுஞ் சொற்களையும் அதைத் தொடர்ந்து காணப்படும் அகர வரிசையையும் பயன்படுத்திக்கொண்டு தமிழில் பேசும் போதும் எழுதும் போதும் வழங்கித் தமிழ் நலங் காப்பது கடமையாகும்.

உறவு முறைச் சொற்களின் அட்டவணை :—

ஆண்—பெண் : வழிமுறை ; (வமிசம்)

கொள்ளுப் பேரன் → பேரன் → மகன் → பாட்டன் → பூட்டன்.

ஷை பேத்தி → பேத்தி → மகள் → பாட்டி → அம்மாச்சி.

உறவு முறை : (அழைக்கும் முறை)

அம்மா — அப்பா

உடன் பிறந்தாள் உடன் பிறந்தான்

முதுமை : அக்கா → அண்ணன்

இளமை : தங்கை → தம்பி

தந்தைவழி உறவு.

அப்பா — பெரியப்பா — சிற்றப்பா (ஆண்)

அப்பா — அத்தை → மாமா (பெண்)

அத்தாச்சி அத்தான்

தாய்வழி உறவு

அம்மா — பெரியம்மா — சின்னம்மா (பெண்)

அம்மா — அம்மான் + மாமி (ஆண்)

மைத்துனி   அம்மான்சேய்

மனைவி வகையில்.

மாமியார் + மாமனார்

மனைவி   மைத்துனன்

முதுமை :   பெரியவர்.

இளமை : கொழுந்தி   சிறியவர்.

மாமியார் + மாமனார் + மருமகன் (மாப்பிள்ளை)

கணவன் வகையில்.

மாமியார் + மாமனார்

(நாத்தனார்) நாத்தூண் நங்கை   கணவன்

முதுமை : பெரியவர் + கொழுந்தன் (பெரியவர்)

இளமை : சிறியவர் + கொழுந்தன் (சிறியவர்)

↓

ஓரகத்தி (ஓர்படியாள்) + மனைவி

அண்ணன் + மனைவி தம்பிக்கு அண்ணி

↓

(அருமையாள்)

குறிப்பு:—அழைப்போர், தங்களினும் மூத்தவர்களை உறவு முறை அழைப்புப் பெயராலும்; இளையவர்களை உறவு முறைப் பெயராலோ இயற் பெயரிட்டோ அன்போடழைப்பர். எதுபற்றியும் பெண்பாலாரில் யாரையும் "அடி" என்றழைப்பது பெருந்தவறாகும். இவ்வகையில் பழக்கம் பெற்றுவிட்டவர் அரிதின் முயன்று விட்டுவிடுவாராக.

மாமியார் + மாமனார்

மூத்த பெண் இளைய பெண்

கணவர் + ஓர்படியார் + கணவர்

(சகலர்)

"ஓர்படி" என்ற உறவு முறையினர்: ஆண்கள் தம்மினும் மூத்தோரை அண்ணன் எனலாம். (இளையோரைத் தம்பி) பெண்கள் தம்மினும் மூத்தோரை அக்கா எனலாம். (இளையோரைத் தங்கை)

உறவு முறைச சொற்களின் அகர வரிசை :—

அப்பா :— தாதை, பயந்தான், ஐயன், தந்தை, அத்தன், ஈன்றான்.

அம்மா :— அவ்வை, அம்மனை, பயந்தாள், ஈன்றாள், அம்மை, யாய், அன்னை, ஆயி, தாய்.

கணவன் :— கொழுநன், வேட்டோன், துணைவன், தலைவன், கொண்கன், நாயகன், காதலன், அகமுடையான், கேள்வன். உரியோன்.

பாட்டன் :— தாத்தா, தாதை, தன்றாதை, மூதாதை.

பாட்டி ;— ஆத்தா, அம்மாயி, அப்பாயி, ஆச்சி.

பின் பிறந்தாள் :— தங்கை, இளையவள், பின்னை.

பின் பிறந்தான் :— இளவல், பின்னை, பின்னவன், தம்பி, இளையோன்

மகள் :— சிறுவி, ஐயை.

மகன் :— மதலை, தோன்றல், செம்மல், பிள்ளை, முளை, மைந்தன், கால், வழி, சேய், எச்சம்.

மனைவி :— இல்லவள், உரியோள், இல், இல்லாள், மனையாட்டி, மனை, வாழ்க்கைத் துணை, காதலி, நாயகி, அகமுடையாள்.

வளர்த்ததாய் :— செவிலி, கோடாய், கைத்தாய்.

வளர்க தமிழ்ப் பற்று!

தி. பால சுப்பிரமணியன்,
தமிழாசிரியன்,
தூய பேதுரு உயர் நிலைப்பள்ளி,
தஞ்சாவூர்.

தற்கால பெரும்பாலான மாணவர்களின் ஒழுக்கநிலை

தற்கால பெரும்பாலான மாணவர்கள் ஒழுக்கம் என்ற வகையிலே எவ்வாறு நடந்து அதற்கான நன்மைகளையும் தீமைகளையும் அனுபவிக்கின்றார்கள். அனுபவிக்கப் போகின்றார்கள்! அதோடு ஆசிரியர்களிடத்தில் எவ்வாறு நடக்கின்றார்கள், அவ்வாறு நடப்பதால் அவர்களுக்கோ அல்லது பிறருக்கோ நன்மையா? அல்லது தீமையா? என்பதெல்லாம் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

தற்கால மாணவர்களில் பெரும்பாலோரின் ஒழுக்கம், அடக்கம் அமைதி எனப் பல வகைகளை நோக்குமிடத்து மிக மிகப் பரிதாபகரமாய் இருக்கிறது. பெரும்பாலான மாணவர்கள் கல்வி என்ற வகையிலே ஒரு வகையாய் கற்றிருக்கின்றார்களே தவிர அதன் பயனை உணர்ந்தவர்களாய் உண்மையில் தெரியவில்லை, "கற்கக் கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக" என்ற குறளை ஒருவாறு மாணவர்கள் கற்றிருக்கலாம். கற்க என்ற வகையிலே ஒருவாறு கற்றிருக்கலாம், கசடற என்று கூறியிருப்பதில் ஒருவாறு தெரிந்திருக்கலாம். கற்பவை என்ற பொருளை எடுத்துக் கொள்வோமாயின் அநேகர் தெரியாது பல நூல்களை அதாவது மாணவர்கள் கற்கக் கூடாதவற்றைப் படித்து ஒழுக்கத்தினின்று வேறுபட்டு நடக்கின்றார்கள். கற்றபின் நிற்க அதற்குத் தக என்பதை நோக்குமிடத்து உண்மையில் பெரும்பாலோர் கற்றபடி ஒழுகுவதாகத் தெரியவில்லை.

"நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்கம் என்று மிடும்பை தரும்" என்ற வள்ளுவப் பெருமானின் வாய்மொழியை உணர்வார்களாயின் நல்லொழுக்கம் எவ்வளவு சிறந்ததென்று எண்ணி ஒவ்வொருவரும் நல்ல முறையிலே நடப்பார்கள். ஒழுக்கத்துடன் நடப்பதால் பயன் என்ன? ஒழுக்கம் தவறி நடந்தாலும் அநேக நன்மைகளை அடைதல் கூடுமே! என்று எண்ணும் எண்ணிறந்த மாணவர்களின் அறிவைத் திருத்தவேண்டும் என்றும் நல்லொழுக்கம் எவ்வளவு சிறந்ததென்றும், அது எதற்கு ஒப்பாகக் கருதப்படுகிறது என்றும் எடுத்துக் கூறவேண்டுமென்று எண்ணங்கொண்ட பொய்யா மொழிப் புலவர் "ஒழுக்கம் விழுப்பந்தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்று கூறியுள்ளதை நோக்குமிடத்து ஒழுக்கத்தின், உயர்வு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் மிகத்தெளிவாகக் காட்சி அளிக்கும்.

மாணவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் ஒவ்வொருவரும் ஆசிரியர்களிடத்தில் நடந்துகொள்ளும் விதம் யாதென்று வினவின் செல்வர்கள் முன்னே வறியவர் எத்தகைய அடக்கத்துடன் நின்று தாங்கள் விரும்பியதைப் பெற முயற்சிக்கின்றார்களோ அந்த நிலைமையில் மாணவர்கள் ஆசிரியர்களின் முன்னிலையிலே நின்று பாடத்தைக் கற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு கற்பது இழிவு என்று கருதும் மாணவர்கள் இழிந்தவர்கள் என்றே கருதப்படுவர் என்று கூற முயற்சித்த வள்ளுவப்பெருமான்

> " உடையார்முனில்லார்போ லேக்கற் றுங்கற்றார்
> கடையரே கல்லாதவர்."

என்று கூறியுள்ளார்.

> " ஆசிரியரைக் கண்டு அன்புடன் எழுமின்
> இருகை கூப்பி இணையடிதொழுமின்
> எவு கட்டளைக்கே எதிர்பார்த்திருமின் "

என்ற முதுமொழியின்படி ஆசிரியரைக் கண்டு அன்புடன் எழுந்து இருகைகளையும் கூப்பித் தொழுது நின்று, அவர்கள் வாயினின்றும் என்ன கட்டளை வெளியாகப் போகிறது என்று மாணவர்கள் எதிர்பார்க்கின்றார்களா ? என்பதை நோக்குமிடத்து பெரும்பாலான மாணவர்கள் அவ்வாறு செய்வதாகத் தெரியவில்லை.

ஆனால் அம்மாணவர்களின் செய்கைக்குத் தக்கவாறு நடக்கும் ஆசிரியர்கள் வருவார்களாயின் அவர்களைக் கண்டு அன்புடன் எழுகின்றார்கள். ஆனால் மேற்கூறிய மற்ற இரண்டின்படி நடப்பதாகத் தெரியவில்லை.

அறிவிற்சிறந்த அளவிடற்கரியாத பெரியோர்கள் பலர் தாங்கள் ஆசிரியர்களாகச் சென்று தங்களது அறிவுத் திறமையை மாணவர்களுக்கு வெளிப்படுத்தி அவர்களது அறிவினைப் பெருக்கவேண்டுமென்று எண்ணியபோதிலும் அவர்கள் மனது இடம் கொடுக்க மறுக்கின்றது இவற்றிற்கெல்லாம் காரணம் தற்கால பெரும்பாலான மாணவர்கள் செய்யும் அட்டூழியங்களேயாகும்.

அறிவிற் சிறந்த பெரியோர்கள் ஆசிரியர்களாய் வந்திருப்பினும்கூட அவர்களும் தங்களது அறிவுத்திறனை மாணவர்களிடத்துச் செலுத்தவேண்டுமென்று விரும்புவதில்லை. அவர்கள் தங்களுக்குக் குறிப்பிட்டுள்ள பாடங்களைமட்டும் நடத்திவிட்டு நல்ல முறையிலே சென்று விடுகின்றார்கள். ஆனால் இவ்வாறு ஒழுக்கமின்மையில் ஈடுபட்ட மாணவர்கள் சிலர் இருப்பதனால் ஒழுக்கத்துடன் நடந்து ஆசிரியரின் அறிவுத்திறனை காமும் அனுபவிக்கவேண்டும் என்று பேரவாக் கொண்டுள்ள பெரும்பாலான மாணவர்


The First St Peter's Troop.
Cubs.
By S.R. PANDYAN.


The First St. Peter's Troop.
By S.R. PANDYAN

களின் எண்ணம் வீணுகின்றது. எவ்வாறு பயிரை அழிக்கவேண்டுமென்று களையானது விரும்பி வந்து பயிரை அழிக்க முயற்சிக்குங்கால் அக்களையை வேருடன் பிடுங்கி எரிந்து பயிர் செழிப்புற்று வளர்வதற்கான ஏற்பாடு செய்கின்றனரோ அதைப்போல் தீய மாணவர்களை நல் வழியில் செலுத்து வதற்குப் பிரயத்தனப்பட்டும் முடியாவிடின் அவர்களை அறவே ஒழித்து மற்றுமுள்ள மாணவர்களுக்கு அறிவைக் கொடுக்க வேண்டியது ஆசிரியர் களின் கடமையாகும்.

ஒரு மாணவனை அவனது பெற்றோர்கள் அழைத்து தங்களது வீட் டிற்கு வேண்டிய பல பொருள்களைக் குறித்துக்கொடுத்து அதற்கு வேண் டிய தொகையையும் அவனது கையிலே கொடுத்து தம்பி! இச்சீட்டினைக் கடைக்காரனிடத்தில் கொடுத்துப் பொருள்களைப் பெற்றுக்கொண்டு வா என்று கூறி அனுப்ப அப்பையன் கடைக்காரனிடத்தில் சென்று தனது பெற்றோர்களால் குறித்துக் கொடுக்கப்பட்ட பொருள்களின் ரசீதையும் அதற்கான பணத்தையும் கொடுத்துவிட்டு பொருள்களை வாங்கிக்கொள் ளாது வீணே திரும்பிப் போக கடைக்காரன் பையனைக் கூப்பிட்டுத் 'தம்பி பொருள்களை வாங்கிக்கொண்டுபோ' என்று கூறி அழைக்க, அதற்கு அப்பையன் எனக்குப் பொருள் தேவையில்லை பணத்தை நீயே பெற்றுக் கொள் என்று கூறிவிட்டு வீட்டிற்கு வீணே திரும்பிச் செல்வதைப்போல் இருக்கின்றது தற்கால பெரும்பாலான மாணவர்களின் நிலை. அதாவது ஆசிரியர் 'தம்பி உனது பாடத்தை நீ ஒழுங்காகக் கற்றுக்கொண்டு போ' எனப் பன்முறை வற்புறுத்தி அவர்களுக்குப் பாடங்கற்பிப்பினும் எனக்குத் தேவையில்லை என்று கூறுவதைப்போல் இருக்கின்றது. ஆனல் ஆசிரியர் களால் ஊட்டத்தான் முடியும் பிறருக்காகத் தான் உண்ணவும் முடியுமா? ஒருக்காலும் எவ்வாலும் முடியாது. ஆகவே அவரவர்களும் ஒழுங்காக இருந்தால்தான் முன்னேற முடியும்.

தீய பழக்கங்களிலே ஈடுபட்டிருக்கும் மாணவர்களை ஆசிரியர்கள் பார்த்து இத்தீய பழக்கங்களினின்று விலகி நல்ல முறைகளிலே நடக்கப் பழகிக்கொள் என்று கூறும்பொழுது, தூணைக் கட்டிப் பிடித்துக்கொண்டு நிற்கும் ஒருவனைப் பார்த்து அந்தத் தூணை விட்டுவிட்டு இங்குவா என்று அழைக்கத் தூண் என்னை விடமாட்டேன் என்கின்றதே என்று கூறுவதைப் போல் இருக்கின்றது. தீய பழக்கத்தினின்றும் விலக முடிய வில்லையே என்று கூறும் மாணவர்களின் நிலை. இதிலிருந்து தூண் அவர் களை விடமாட்டேன் என்கின்றதா! அல்லது தூணை அவர்கள் விடமாட் டேன் என்கின்றூர்களா என்பதைப் பார்க்கும்பொழுது, தூணிலிருந்து எவ்வாறு சுலபமாய் விலக முடியுமோ அதைப்போல் மனதை ஒன்றுபடுத் தினல் தீய பழக்கத்தினின்றும் விலகமுடியும் என்பது வெளிப்படை.

4

"எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்ற முதுமொழியின்படி எழுத்தைக் கற்பித்துக் கொடுத்தவன் இறைவனுக்கு ஒப்பாவான் என்று எண்ணி நடப்போமாயின் கடவுளிடத்திலிருந்து பெறுவதற்கு அருமையான அதிகமான நன்மைகளை ஆசிரியர்களிடத்திலிருந்து பெறுதல் கூடும். ஆசிரியர்களுக்கு அதிக ஆதரவையும் மதிப்பையும் தராது உயர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கு அதிகமான மதிப்பைக் கொடுத்தல் எவ்வாறு இருக்கின்றதென்றால் அஸ்திவாரத்தைப் பலமாகப் போடாது சுவரை மிக அழகாக எழுப்ப அது திடீரென விழுந்து மிக்க துன்பத்தைத் தருவதற்கு ஒப்பாகும். ஆகவே அஸ்திவாரத்திற்கு ஒப்பான அதாவது சுவர் எழுப்பி நல்ல முறையிலே நெடுநாள் நீடித்திருப்பதற்கு இன்றியமையாத அஸ்திவாரத்தைப்போல் அவர்களுக்கு அளவுகடந்த மதிப்பையும் ஆதரவையும் தந்து ஆதரித்து அதிகமான பலனை அடைதல் மாணவர்களது இன்றியமையாத கடமைகளில் ஒன்றாகும்.

தற்கால மாணவர்களும் வருங்கால மாணவர்களும் ஆசிரியர்கள் என்ற அளவிலே அதிகமான மதிப்பைத் தந்து ஆதரித்தால்தான் தற்காலத்தில் ஆசிரியர்களாய் இருப்பவர்களைத் தவிர மற்றும் அறிவிற் சிறந்த பெரியோர்கள் குறைந்த ஊதியமாய் இருப்பினும் நிறைந்த மதிப்பும் அறிவுத் திறமையை வெளியிடுவதற்கு வேண்டிய அவகாசமும் இருக்கின்றதென்று எண்ணி மிக்க ஆவலுடன் ஆசிரியத் தொழிலுக்கு வருதல் கூடும்.

ஆசிரியர்களுக்கு மதிப்பைத் தராது மேலும் மேலும் குறைந்த மதிப்பே கிடைக்குமாயின் ஆசிரியர்களாய் வருவதற்கு அனைவரும் விரும்பாது சீர்கேடான நிலைமை ஏற்பட்டுவிடும். "கண்ணுடையர் என்பர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையார் கல்லாதவர்" என்ற வள்ளுவப் பெருமானின் வாக்குப்படி கண்ணுடையவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் கற்றவர்களாய் இருத்தல் வேண்டும். அவ்வாறு கற்காதவர்கள் முகத்திலுள்ளது புண்ணுக்கு சமமாயும் கூறுவதால் கற்பதற்கு அறிவுடைய கண்களாகச் செய்வதற்கு உதவியாய் இருக்கும் ஆசிரியப் பெருமக்களை ஆதரித்தல் வேண்டும்.

அதோடுகூட மேற்கூறியபடி நடந்தால் தற்பொழுதுள்ள ஆசிரியப் பெருமக்களால் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் அறிவுத்திறனும் வெளிப்பட்டு மிக்க நல்ல முறையிலே மாணவர்கள் மற்றும் நாடும் முன்னேறுவதற்கான நன்முறை ஏற்பட்டு அறிவுத்திறன் அதிகப்படுமென்பதற்கு ஐயமில்லை.

மாணவர்களின் நல்லொழுக்கம் ஓங்குக.

ந. நாகராசன்,
ஆறாம் படிவம், இ. பிரிவு

பள்ளி வாழ்விலே ஒரு பொன்னாள்

நிகழும் வள்ளுவராண்டு 1984, மாசித் திங்கள் 8-ஆம் நாள் (19—2—'53) வியாழனன்று பள்ளித் தமிழ்க் கழகத்திலே வள்ளுவர் நினைவு விழா தொடங்கியது. ஆம்! வள்ளுவருக்கு விழா! தெள்ளு தமிழிலே திருக்குறள் பாடிய பெரும் புலவர்க்கொரு நாள்!! நம் பள்ளி வரலாற்றுப் பொன்னேட்டிலே மூன்றாம் முறையாக வைரக் கற்களினால் பொறிக்கத்தக்க பொன்னாள்!!! பொது மறையாகிய குறளைத் தந்து தமிழன் தலை நிமிர்ந்து வாழ வழிவகுத்த நம் வள்ளுவரின் நன்னாளை என்னென்றியம்புவேன்!

தூய பேதுரு பள்ளியிலே, மாலை மூன்றரை மணியளவிலே, சேய்ப் பள்ளிச் சிறுவர்களுட்படத் தாய்ப்பள்ளியிலே அணி அணியாய்த் திரண்டனர். முதலிலே ஈருருளிகள் மாணவர்களின் இன்பக் கைகளால் உருள, பின்னே வள்ளுவர் படம் வர, அடுத்தாற்போல் அணிநடைச் சாரணர் செல்ல, இறுதியில் மாணவர்கள் "திருக்குறளைத் திக்கெட்டும் பரப்புவோம்" என்ற இன்னொலி எழுப்பி இறுமாந்து ஏறுபோல் வீறுடன் பின்தொடர ஊர்வலம் தெற்குப் பெருந்தெருவின் பாதியளவிற்கு நீண்டிருந்தது. தெருவின் இருபாலும் ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமியர் ஆகிய அனைவரும் கண்களிமயக்கத்துக் காதலோடு கண்ணிமையாது கண்டு வியந்து வாழ்த்திச் சிறப்பித்தனைக் கண்டு பள்ளி மாணவர்கள் தளர்ச்சி நீங்கி, முயற்சிகொண்டு அது உணர்ச்சியாகிக் காண்பவர் உள்ளத்துக் கிளர்ச்சியை மூட்டி யாவரும் மகிழ்ச்சியால் புரட்சி அடையும் வண்ணம் ஊர்வலம் நான்கு பெருந்தெருக்களையும் கடந்து பெருஞ் சிறப்புடன், வருஞ் சிறப்பினை அரண்மனை வாயிலில் கூடியிருந்த ஆயிரமாயிரம் மக்கள் அன்புக் கண்களால் அகலத் திறந்து நோக்க, மாட மாளிகைகள், கூட கோபுரங்கள் வருக வருக என வரவேற்கப் பள்ளி விளையாட்டுக் கூடத்திற்குள் நுழைந்தது.

வலம் வந்தவர்களையும், விழாக்காண வந்தவர்களையும் வாயிலில் நின்ற மாணவர்கள் கனிமொழி கூறி, வரவேற்று மணக்குஞ் சந்தனமும், இனிக்குஞ் சர்க்கரையும் வழங்கினர். பேச்சு மேடை கண்கவர் வண்ண ஓவியங்கள் வரையப்பட்ட தட்டிகளாலும், திரைகளாலும் தனியழகுடன் ஓர்

உயரிய சிறு நாடக அரங்கு போன்று காட்சியளிக்க, தென்பால் வள்ளுவ உருவமும், வடபால் வையகமெங்கும் குறளைப் பரப்பி, தம் கல்லறையில் " தாழ்மையுள்ள தமிழ் மாணவன் " என்று குறிக்கக்கூறியவருமாகிய நம் பள்ளி முன்னாள் தலைவர் ஜி. யூ. போப் அவர்களின் பெருமிதமான படமும் இருக்க, முன்னே தோரணங்களாலும், பச்சிளந் தழைகளாலும் அழகூட்டப்பட்ட அவை சிறந்து விளங்க, மேடையிலே அறிஞர். கா. அப்பாத்துரை எம்.. ஏ. எல். டி., திருச்சி ஜமால் முகமது கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் திரு. கே. ஏ. கஃபூர் எம், ஏ, நம் பள்ளித் தலைவர் திரு. ஜே. ஜி. கோவிற்பிள்ளை பி. ஏ,, எல். டி. அவர்களும் கலந்திருக்க தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. மாணவர் மலர் மாலைகள் அணிவிக்க, பள்ளித் தமிழ்ப்புலவர் திரு. தி. பாலசுப்பிரமணியம் அவர்கள் அன்புகனிந்த அழகான வரவேற்புரை உரைத்தார்.

அவ்வுரையில், பண்ணிகர், தெலுங்கு, துளு, மலையாளம், கண்டை நிகர் கன்னடமென்னும் கவின் மொழிகளைக் கற்று, தென்மொழி, தேன் மொழி, தொன் மொழியென்றெல்லாம் சிறப்பிக்கப்படுகின்ற நம் தீந்தமிழைத் தெள்ளத் தெளியப் பயின்ற பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையவர்கள் தலைவராக அமைந்ததுபற்றிக் கூறிவிட்டு, திரு கஃபூர் அவர்கள் வள்ளுவர் கண்ட நெறி பொது நெறி மட்டுமன்று—அதுவே புது நெறியுமாகும். தமிழகமும் உலகமும் உய்ய அஃதொன்றே வழியென்றும் உணர்ந்தவர் அவர் பேருரையாக ஓர் சீருரை வழங்குவார் என்று கூறி அனைவரையும் வருக வருக என வரவேற்றுத் தம்முரையை முடித்தார்.

" திருக்குறளும் உலக இலக்கியங்களும் " என்ற தலைப்பில் விழாத் தலைவர், " உலகில் வழங்கப்படும் சிறந்த மொழிகளில் தமிழ் ஒன்று. அம் மொழியில் வள்ளுவர் அமைத்த குறள் நாமெல்லாம் பெருமைப்பட வேண்டியது. ஒழுக்க நூலாகிய திருக்குறளை ஓர் உயரிய இலக்கியமாக அமைத்த பெருமை வள்ளுவருக்கே சாலும். பிற மொழி இலக்கியங்கள் இவ்வகையில் நம் திருக்குறளுடன் போட்டியிட முயன்று எட்ட நின்றன சில! கிட்ட வர முயன்றன மற்றுஞ் சில! ஒட்டி நின்றாலும் ஒப்பாகாதென இன்னுஞ் சில! பிழை பொறுத்தற்பற்றி வளளுவர் " இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ்செய்துவிடல் " " இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்தோ சால்பு " என்பன கிறிஸ்துவ மறைக்கருத்தாகிய " இடக் கன்னத்தில் அறைந்தால் வலக் கன்னத்தைக் காட்டு " எனக் கூறும் பகுதியுடன் ஒப்பி மகிழத்தக்கதாகும். அதனால் தான் மேனாட்டு அறிஞர்களின் உள்ளங்களை இந்நூல் கவரமுடிந்தது" என்று ஆழமான கருத்துக்களை அழகான முறையில் முன்னுரையாகவும், பின்னு

யாகவும் பொன்னுரை போன்றதொரு இன்னுரை வழங்கி தம் பணியை சிறப்பாக முடித்தார்.

அடுத்துப் பேசிய திரு. கஃபூர் அவர்கள் "இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்னியற்றப்பட்ட ஒரு நூல். இன்றைய இளைஞர்களும், சிறுவர்களும், சிறுமியர்களும் படித்துணர்ந்து சுவைக்கும்படி அமைந்துள்ள திறத்தைத் தக்க சான்றுகளுடன் விளக்கினார். வள்ளுவரின் மூன்றாம் பாலாகிய இன்பத்துப்பாலில் தம் புலமைத் திறம் அனைத்தையும் பொதித்து வைத்திருப்பதனை எடுத்தியம்பினார். புரட்சிக்கவிஞர், கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை முதலிய இக்காலக் கவிஞர்களின் நல்ல பாக்களில் இருந்து நயமான பகுதிகளைக் குறித்துக் காட்டி உவமை நயம், காவியச் சிறப்பு முதலியவற்றையும் விளக்கிக் கூறினார். இக்காலத்து மாணவ மாணவிகளின் தமிழ்ப்பற்று இன்னும் வளரவேண்டும். தமிழ் நாட்டில் தமிழ்த் தெருவில் தமிழரிடையே தமிழ்ப்பற்று பற்றிப் பேச வேண்டிய நிலை மாறி முரசு கட்டிலிலுறங்கிய புலவர்க்கு அரசன் வெண் சாமரம் வீசியது போன்று மொழிக்குயர்வு தரும் நாள் என்நாளோ அந்நாளே தமிழனை தலை நிமிர்ந்து வாழவைக்கும் நன்னாள்" என்று கூறி தனது சொற்பொழிவை முடித்தார்.

இறுதியில் அல்லும் பகலும் அறுபது நாழிகையும் தம்மை மறந்து தமிழ்ப்பணி செய்துவரும் ப. வேங்கடசுப்பிரமணியனின் அன்பும் பண்பும் சான்ற நன்றியுரையுடன் விழா பெரும் பயனைத்தந்து இனிது நிறைவேறியது.

வையத்து வாழ்வார் உள்ளிருள் நீக்கிய வள்ளுவம் வாழ்க!
பைந்தமிழ்ப்பணி செய்யும் நம் செந்தமிழ்க்கழகம் சிறக்க!!
பொங்குக பைந்தமிழ்ப் பேதுருப் புகழ்!!!

புகழிலே, மு. அழகிரிசாமி,
ஐந்தாம் படிவம் 'அ' பிரிவு,
தமிழ்க்கழகம்,
தூயபேதுரு உயர்நிலைப்பள்ளி.

எங்கள் உல்லாசச் செலவு

உல்லாசச் செலவு என்றவுடன் வீட்டில் சிறு பொருள், (திருடி) தேடி, ஊரெங்கும் சுற்றிப் பின், உடல்வற்றி, உணவின்றி இல்லம் திரும்பிவரும் செலவல்ல! செலவு என்றதும் பணத்தைப் பற்றிய செலவு என்றே பெரும்பாலோரின் சிந்தனைக்குத் தோன்றும். "எனக்...கும்...!" முடிக்கவில்லை நீங்களே முடித்துக் கொள்ளுங்கள்.

"வீண் பேச்சிலேயே கவனம் செலுத்திவிட்டு முக்கிய விஷயத்தைச சொல்ல மறந்துவிட்டேன்" என்று நீங்கள் எண்ணுவதுதான் என் ஞானக் கண்களுக்குத் தெரிகிறதே! இதோ சொல்கிறேன்.

இன்பம் என்பது பலவிதம் அதனுள் நாம் மாணவர்கள்—அடைய வேண்டுவது சில அவற்றுள் உல்லாசப் பிரயாணம் என்னும் உல்லாசச் செலவும் இன்பம் பயக்கவல்லது. மட்டற்ற மகிழ்வையூட்டி மாறுபட்ட மனத்தையும் மாற்றவல்லது. இன்று மேனாடுகளை எடுத்துக்கொள்ளின் ஆங்குப் பயிலும் மாணவர்களின் அரும் பெரும் கல்வி முறையில் ஆறுமடங்கில் ஐந்து மடங்கு உல்லாசச் செலவினால் கற்கும் வகையில் அமைந்துள்ளது என்பதை இன்றும் நாம் கண்கூடாகக் காண்கிறோம். சென்னை போன்ற பெரிய நகரங்களில் இல்லம் (வீடு) இன்றி அல்லல் படும் வறிய மக்களுக்கு வீட்டைக் கட்டித்தரும் பணியில் யார் உதவி செய்கின்றனர்? எல்லாம் அயல் நாட்டு மாணவர்கள்தான். அதிலும் பெண்மணிகளும் கூட! அங்ஙனம் உல்லாசச் செலவினால் பன்முறையில் முன்னேறலாம்.

இனி நாம் சென்றுவந்த உல்லாசச் செலவைப் பற்றி ஆராய்ந்தறிவோம்.

கதிரவன் தன் கதிர்களை அள்ளி வீசிக்கொண்டு புறப்பட ஐந்து நாழிகைக்கு (இரண்டு மணி) முன்பாகத் தஞ்சைமாநகரைவிட்டுப் புறப்பட்டது. எங்கள் வாகனம் (Bus) காலை ஆறரை மணிக்கெல்லாம் எங்களைத் திரிசிராபுரத்தில் (திருச்சிராப்பள்ளியில்) கொண்டு போய்ச் சேர்த்தது. அங்கு எங்கள் காலை உணவை முடித்துக்கொண்டு, சுமார் தொண்ணூறு மைல் தொலைவிலுள்ள சேலம் மாநகரை பகல் ஒரு மணிக்கெல்லாம் வந்தடைந்தோம்.

சேலம் மாநகரை விட்டதும் எங்களது அடுத்த தங்கல் தென்னிந்திய அணைக்கட்டுகளிலேயே மிக நீளமான, உயர்ந்த "மேட்டூர் அணைக்கட்டு" (METTUR DAM) என்னும் ஊரில்.

சுமார் மூன்று மணி நேரம் மேட்டூரில், அணைக்கட்டு, மின்சார உற்பத்தி நிலையம், காவிரிக்கு நீரையளிக்கும் மதகுகள், அணைக்கட்டின் நீண்ட வசத்தில் அணையின்கீழ் அமைந்துள்ள சுரங்கம் போன்ற இடம், அங்குள்ள பூங்கா முதலியவற்றைக் கண்டுகளிக்க நேர்ந்தது.

இங்ஙனம் சுருக்கிக் கூறுவதில் பயனில்லை. விளக்கிக் கூற நோக்கினால், அகன்ற பரப்பினையுடைய, அமைதியைத் தன்னகத்தே கொண்ட அழகிய மேட்டூர் நீர்த் தேக்கத்தை என்னென்றியம்புவது ? முப்பத்து மூன்று சதுரமைல் பரப்பளவு நீரைத் தன்னகத்தே கொண்டு, நீண்டு உயர்ந்த மலைகளை நீர்த்தாண்டிச் செல்லா வண்ணம் இருமருங்கிலும் பெற்று அமைதியை நிலைநாட்டி, எங்கள் வாவிற்கு நல்வரவளித்தது அந்நீர்த் தேக்கம். ஆயினும் அதற்கு முரணாக அமைந்துளது. அதனின்றும் பெரிய மதகுகள் வழியே வெளிவரும் காவிரியின்பேரிரைச்சல். அது தன்னருகில் வருவாரை அச்சமுறச் செய்கிறது. நீர் வெளிவரும் வேகத்தில் நீர்த் துளிகள் புகைபோல் அணையின் ஓரத்தில் சுமார் இருபதடி உயரம் வரை பரவி நிற்கிறது.

இவ்வணை 5300 அடி நீளமும், 176 அடி உயரமும் உடையதாக அமைந்துள்ளது. இவ்வணை நன்முறையில் வெற்றிகரமாக முடிந்தமைச் சென்று இதனருகில் ஒரு நினைவுச சின்னம் அமைக்கப்பட்டுள்ளது. அது எண் கோணவடிவமாய் பந்துபோன்று ஒரு குன்றின்மேல் அமைந்துள்ளது. இதன் உட்புறத்தில், அணையின் உருவப்படமும், பல விவரங்களும் பொறிக்கப்பட்ட பித்தளைப் பலகை ஒன்று சுவரில் பதிக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்தினின்றும் பார்த்தால் அணையும், நீர்த்தேக்கமும் தெள்ளென விளங்கும். அத்துடன் அணையின் மறுபுறத்திலுள்ள முப்பத்து நான்கு ஏக்கர் பரப்புடைய பூங்கா ஒன்றுளது.

யாவற்றையும் கண்டு அகமகிழ்ந்து மீண்டும் சேலம் மாநகர் வந்தடைந்தோம். அங்கு இரவைக் கழித்துவிட்டு மறுநாட்காலை 11 மணிக்கெல்லாம் 'ஏற்காடு" என்ற ஊரையடைந்தோம். அது மலை உச்சியிலுள்ள ஒரு ஊராகும். கடல் மட்டத்திலிருந்து சுமார் 5000 (ஐயாயிரம்) அடி உயரத்தில் அமைந்துள்ளது. அவ்வூரில் படக்காட்சிகள் எடுப்பதற்கேற்ற இனிய எழில் நிறைந்த காட்சிகளும், காடுகளும், ஓடைகளும், பழத்தோட்டங்களும், ஏரிகளும், சோலைகளும் அமைந்து விளங்குகின்றன. காலை ஒன்பது மணி வரை அவ்வூரின் சீதோஷ்ண நிலை குளிராகவே இருக்கிறது.

ஏற்காடு என்ற அம்மலை கடல் மட்டத்திலிருந்து சுமார் ஐயாயிரம் அடி உள்ளது. அங்குள்ள மலைகளைப் பார்த்துவிட்டு, பகல் உணவை ஏற் காட்டில் முடித்துவிட்டுச் சேலம் திரும்பி வந்துவிட்டோம்.

பின் சேலத்திலிருந்து சுமார் மூன்று மைல் தொலையிலுள்ள "பொய் மான் காடு" என்னும் இடத்தை யடைந்தோம். அங்கு ஒரு மலை உள் ளது. அது ஒரு சிறிய மலை. அதனின்றும் சுமார் இருநூறு அடிக்கப் பால் தரையினின்று நோக்கினால் அம்மலையின் இரு பிளவுகளுக்கிடையில் ஒரு மான் நிற்பதுபோன்று தோன்றுகிறது. ஆனால் அருகிற்சென்று பார்த் தால் ஒன்றும் தெரியவில்லை. இதற்கு ஒரு கதை வழங்குகிறது. இராம பிரான், மான் ஒன்றைத் துரத்திவர அந்த மான் இராமனாகிய அவ்வேடனை ஏமாற்றி விட்டு மலையொன்றின் பிளவுக்குள் ஒளிந்துகொண்டதாகவும், அந்த மான்தான் இந்தமான் எனவும், இது பொய் மானானமையால் பொய் மான் காடு என்றும் கூறுகின்றனர். என்ன வியப்பு!

பின் "பனைமரத்துப்பட்டி" என்ற ஊரையடைந்து அங்குள்ள அகன்ற ஏரி யொன்றைக் கண்டோம். அவ்வேரியை சேலம் மாநகரின் ஜீவநாடி எனலாம். அதிலுள்ள நீர்தான் சேலம் நகர மக்களுக்கு குடி நீராகப் பயன்படுகிறது.

எங்கள் உல்லாசச செலவு முடிந்தது. சேலத்தைவிட்டுத் திரும்பி னோம். வரும் வழியில் அரசவைக் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை அவர்களின் சொந்த ஊரான நாமக்கல்லைக் கண்ணுற்றோம். அங்கு ஒரு மலை உளது. அது முழுதும் கற்பாறையாலாயது. அதன்மேல் நாற்புறத் திலும் அடைப்பு. நடுவில் மதிற்சுவர்களாலான ஒரு கட்டிடமும் வடக்கு, தெற்கு ஆகிய திசைகளில், திசைக் கொன்றாக இரு பாதைகளும் காணப் பட்டன.

இவற்றினையெல்லாம் கண்டுகளிக்கச செய்து எங்களை யறியாமலேயே தஞ்சைக்குக் கொண்டுவந்து சேர்த்தது நாங்கள் ஏறியிருந்த வாகனம்.

என்ன விந்தை! எங்கள் உல்லாசச் செலவு எங்களுக்குச சில போதனைகளைக் கற்பித்தது. மீண்டும் இவ்விதம் புறப்படத் தூண்டிற்று. தூண்டுகிறது. என் செய்வது?

எதற்கு...?

"பண...த் . து...க்கு...!" என்று என் பாழாய்ப்போன மனம் எண்ணி முடித்ததற்கெதிராய், "மீண்டுமொரு முறைப் பார்த்தால்கூடத் தேவலாம்" என்று முணு முணுத்தது என் வாய்...?

சி. கலியாண சுந்தரம்,
ஆறும் படிவம், 'உ' பிரிவு.

திருவள்ளுவர் நினைவு விழா



தலைவர்கள் வருகை

மாணவர் ஊர்வலம்

செயற்குழுவினர்

திரு. கே.எம். கஃபூர் எம்.ஏ.

திரு. க. அப்பாத்துரை எம்.ஏ. எல்.டி.

மாணவர்களுக்குச் சில அறிவுரைகள்.

இன்றே மாணவர்கள் நாம் நாளைய குடிமக்கள் என்பதை உணர்ந்து, அவர்கள் மாணவர்களாயிருக்கும்பொழுது, அதற்கு வேண்டிய பண்பாடும் பயிற்சியும் பெற்றுக் கொள்ளவேண்டும்.

அவர்கள் மாணவர்களா யிருக்கும்பொழுது தங்களுடைய உடல்—அறிவு—ஒழுக்கங்களை எவ்வளவிற்கு நல்ல முறையில் அமைத்துக் கொள்ளுகின்றார்களோ, அவ்வளவிற்கு அவர்களுடைய எதிர்கால நல்வாழ்வும், புகழும் அமைகின்றன. ஏனென்றால் மாணவப் பருவம் மெழுகுப் பருவம். அப் பருவத்தில் கற்பவை பசுமரத்தாணிபோல் உள்ளத்தில் பதியும்.

உடலும், மனமும், ஒன்றி ஒரே நிலையில் வளரும் பருவம். இப்பருவம் தவறினால் பின்னால் முதுமை பருவத்தில் அவ்வளவு எளிதில் விரும்புகிறபடி நம் உடலையும், மனத்தையும் பண்படுத்த முடியாது. ஆகையால்தான் ' இளமையிற் கல் ' என்றும் ' ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது ' என்றும் நம் முன்னோர்கள் கூறிப் போந்தனர். ஆகையால் இவ்வுண்மையை உணர்ந்து மாணவர்கள் காலத்தை வீணாக்காமல், முழு நம்பிக்கையுடன், எதிர்கால நல்வாழ்வை உத்தேசித்து மாணவப் பருவத்தில் நன்கு உழைக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

ஒரு பாடசாலையின் புகழும், தகுதியும், மதிப்பும் அப்பாடசாலையினின்றும் ஆண்டுதோறும் வெளியேறும் தனித்தனி மாணவர்கள் சமூகத்தில் பிற மக்களிடத்துக் காட்டும் சகிப்புத் தன்மையையும், கருணையையும், நேர்மையையும் பொறுத்திருக்கின்றன. தனித்தனி மாணவனின் நேர்மையும், நல்லொழுக்கமும், சகிப்புத் தன்மையும், போற்றலும் மேற் கூறியவற்றின் அளவுகோலாகும், இங்கிலாந்தில் மிகவும் புகழ் பெற்ற ரக்பி பாடசாலை தலைமை யாசிரியர் Dr. ஆர்னல்டு அவர்கள் கைவழியாகச் சென்ற ஒவ்வொரு மாணவனும் அவரிடமிருந்து பெற்ற நல்லுணர்ச்சி வழியாக அப்பாடசாலையின் புகழை நாடெங்கும் பரப்பினராம். அதே போன்று நம் நாட்டிலும் தஞ்சாவூர் தூய பேதுரு உயர்நிலைப்பள்ளி மாணவர்களும், பெருமை கொள்ளத் தகுதியுடையவர்களென்பதை உணரவேண்டும்.

எனவே நம் மாணவர்கள் பலரும் நன்னடத்தையில் இயற்கையிலேயே நாட்டமுடையவர்களாக இருப்பதால் அவர்களை நல்வழிச் செலுத்துவது

மிக மிக எளிதாகும். நம் மாணவர்கள் அடியில் காணப்படுகின்றவைகளை கொள்வார்களேயானால் பொது வாழ்வில் அவர்களின் மதிப்பும், நிலையும் சிறந்தோங்கும்,

மாணவர்கள் பள்ளியில் நல்ல எதிர் காலத்தில் நம்பிக்கையுடையவர்களாய், தங்கள் வேலையில் காலம் தவறாமலும், ஒழுங்காகவும் உண்மையாகவும் ஊக்கமாகவும் உழைக்கவேண்டும். அன்றாடப் பாடங்களை ஒத்திப் போடாமல் அப்போதைக்கப்போது படித்து முடித்துவிடவேண்டும். பாடங்களில் காட்டுவதுபோல் உடலுறுதி, கைத்தொழில் பயிற்சிகளிலும் ஊக்கம் கொள்ளவேண்டும். சான்றோர்களையோ, ஆசிரியர்களையோ கண்டால், பொருத்தமானபடி தவறாமல் வணக்கம் செலுத்தவேண்டும். பொதுவாக இவ்வொழுக்கங்கள் யாவராலும் வலியுறுத்தப் படுபவையாகும் அவைகள் அடிப்படையான ஒழுக்கங்கள். அவைகள் ஒருவரின் உள் உணர்ச்சியின் வெளிப்படையான அறுகுறி. ஆகையால் நாம் அவற்றை உறுதியாகக் கைக்கொள்ளுதல் வேண்டும், பாடம் தொடங்கியபிறகு எக்காரணம் கொண்டும், பிற வகுப்பிலுள்ள மாணவரைக் கண்டு பேசவோ அல்லது அவரிடமிருந்து நூல்கள், மையூறி முதலியன வாங்கச் செல்லவோ கூடாது. அவ்வகைச் செயல்களை இடை வேளையில் வைத்துக்கொள்ள வேண்டும். பஸ்ஸிற்கோ, ரயிலுக்கோ, படக்காட்சிக்கோ செல்லும்போது நுழைவுச் சீட்டுக்களை 'க்யூ' வரிசையில் நின்று வாங்கத் தவறக் கூடாது. ரயிலிலோ, பஸ்ஸிலோ யாத்திரை செய்யும்பொழுது, முதியோர்கட்கும், பெண்களுக்கும் முதலில் இடம் கொடுக்கவேண்டும்.

பெரியவர்கள் பேசும்பொழுது குறுக்கே பேசக்கூடாது. அவர்கள் பேசி முடித்தபிறகு, பேசவேண்டிய அவசியமிருந்தால்தான் பேசவேண்டும். இருமும்பொழுது அல்லது தும்மும்பொழுது பிறர் கவனத்தை ஈர்க்காதபடி வாயில் கைக்குட்டையை வைத்துக்கொள்ளுதல் வேண்டும். கொட்டாவி விடும்பொழுது, வாயைத் திறந்துகொண்டு அநாவசியமாக சத்தம் உண்டாக்கக் கூடாது. கொல்லென்று அநாவசியமாகச் சிரிக்கக் கூடாது. பெரியவர்கள் நின்றுகொண்டிருக்கும்பொழுது நாம் உட்காரக் கூடாது. சாப்பிடும்பொழுது வாயினால் சப், சப் என்று சத்தம் உண்டாக்கக் கூடாது. ஒருவரிடமிருந்து ஒரு உதவி கேட்கும்பொழுது 'தயவு செய்து' என்றும், பெற்ற பிறகு 'நன்றி' என்றும் சொல்லத் தவறக்கூடாது. மாணவர்கள் எக்காரணம் கொண்டும் சுவரில் எழுதுதலும், படிப்பறையிலுள்ள, நாற்காலி, பலகை முதலியவற்றைக் கத்தியால் வெட்டிக் குறை படுத்துதலும் கூடாது.

வீட்டில் நுழையும்பொழுது கதவு தாளிட்டிருந்தால் தட, தட வென்று தட்டக்கூடாது. ஒரு அலுவலகத்துள் (office) செல்ல நேரிட்

டால் ஒப்புதல் பெற்று உள்ளே செல்லவேண்டும். எப்பொழுதும் நம்மால் நம்முடைய நன்மையைக் கருதி ஏற்படுத்தப்பட்டிருக்கும் சட்ட திட்டங் களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்

சில தினங்களுக்கு முன் சென்னையிலுள்ள பிரசிடென்சி கல்லூரி மாணவர்களிடம் பேசிய நமது முதலமைச்சர் ராஜாஜி அவர்கள் ஒழுக் கத்தை வற்புறுத்திக் கூறியிருப்பது இவண் பாராட்டுதற்குரியது.

“ கல்வி யென்பது தலைமீது பெரிய அறிவு மூட்டையை சுமப்பதல்ல. பெரிய துணி மூட்டையைச சுமக்கின்ற கழுதையை நல்ல உடை அணிந் திருப்பதாகக் கருதுகின்றோமா ? இல்லை. நீங்கள் வைத்திருக்கின்ற அறிவு உங்களுடைய தினசரி வாழ்க்கையில் எதிரொலிக்க வேண்டும், ஒழுக்கத்துடன வாழ்வதுதான் உண்மையான கல்வி.”, என்று முதலமைச் சர் கூறியிருப்பது மாணவர்கள் ஊன்றிக் கவனிக்கத் தகுந்தது.

“ வாழ்க மாணவர் ”

S. DEVADASS,

வன போசனம் (Picnic).

ஹா ! வன போசனமா ! எங்கு ? எப்போது ? “ தென் னாட்டின் நெற் களஞ்சியமென ” பண்டைப் புகழ் பெற்று இன்று படியரிசி ரூ. 1—2—0 வீதம் கிடைக்கப் பெறும் நம் தஞ்சையிலா ! என வியப்பும் திகைப்பும் ஐயமின்றி உண்டாவது திண்ணம். ஏன் எனின் படியரிசியைப் பிடியரிசியாக மதித் திருந்த பொற்காலம் மாறி, பிடியரிசியைப் படியரிசியாக மதிக்கவேண்டிய அவலமான கற்காலத்திலன்றோ வாழ்ந்து வருகின்றோம்.

நமது பள்ளி இடைத்தரப் படிவங்களைச் சார்ந்த மாணவர்கள் அறு பதின்மரும் அடியிற் கண்ட ஆசிரியர்களும் 28—2—53 சனிக்கிழமை யன்று காலை பண்டிதர் சோலைக்குச் சென்றோம்.

உயர் திருவாளர்கள் :

1 G. தேவ இரக்கம் (கண்காணிப்பாளர்)
2. T. K. சுந்தரமய்யர் (மூத்தோர்) இயக்கத் தலைவர்
3. V. இராசகோபால் (உணவு தயாரிப்பவர்)
4. S. நாராயணசாமி ,,
5. T. K. சுந்தரம் (இளையோன்) ,,
6. I. தங்கசாமி (ஒழுங்குமுறை)

மாணவர்கள் :

1. N. தங்கவேலு (தண்ணீர் வசதி கவனிக்க)
2. S. நடராசன் (விறகு)
3. முருகேசன் (சமையலறை)
4. M. சீனுவாசன் (பண்ட வசதிகளை கவனித்தல்)
5. M. மனோகரன் (பரிமாறுதல்)
6. D. பாலசுப்பிரமணியன் (பாத்திரங்களைச சுத்தம் செய்தல்
7. V. பார்த்தசாரதி (பண்டகசாலையைக் கவனித்தல்)
8. இராமச்சந்திரன் (இசை நிகழ்ச்சித் தலைவர்)

இவ்விதக் குழுக்களுடன் அணி வகுத்து, காலை 7-15-க்குப் பள்ளியினின்றும் புறப்பட்டு 8 மணிக்குப் பண்டிதர் தோட்டத்தை யடைந்தோம். நமது பள்ளித் தலைவர் (Principal) அவர்களும், உதவித் தலைமை யாசிரியர் (Deputy Headmaster) அவர்களும், எங்களுடன் கலந்துகொள்ள இயலாமல் இருந்தமைக்கு வருந்துகின்றோம். எங்கள் அழைப்பிற்கு இணங்கி எங்களுடன் வந்திருந்த உயர் திரு. தாமஸ் அவர்கட்கும் உயர் திரு. S. R. பாண்டியன் அவர்கட்கும் எங்களது நன்றி.

மாணவர்கள் ஒவ்வொருவரும், அரிசி முதல் உப்பு ஈறாக உள்ள எல்லா உணவுப் பொருள்களையும், காய்கறிகளையும், எண்ணெய், நெய் முதலிய பல பொருள்களையும் சேகரித்தனர். இவ்வாறு சேகரித்தவர்கள், மூன்று படிவங்களிலும் சேர்ந்து அறுபதின்மர் ஆவர். என்னே! இவர்களது ஊக்கம்! மிகக் குறுகிய காலத்தில், மிக விரைவில் திட்டமிட்டனர். மாணவர்களின்மீது கருணைகொண்டுதான் அன்று கதிரவனும், தனது சுடு கதிர்களை அள்ளி வீசாது, சற்று அமைதியுடன் இருந்தான் போலும்.

தோட்டத்தை யடைந்ததும் மாணவர் தமக்கு இடப்பட்ட ஒவ்வொரு பணியையும் கூட்டு முறையிலும், தனித்தனியாகவும் செய்து முடித்தனர். தண்ணீர் நிரப்புதல், பண்டங்களைச் சீராய் சமையல் அறையிற் சேர்த்தல், சமையலறையைச் சுத்தம் செய்தல், காய்கறிகளை ஆய்தல், முதலிய பல பணிகளையும் மன ஆர்வத்துடன் செய்தனர். சுமார் 8-45 மணிக்கு, மாணவர்களின் உதவிகொண்டு, அடிசில் தயாரித்தல் பணியை மேற்கொண்டோம். உணவு தயார் செய்வதற்கெனப் பல பாத்திரங்களைத் தந்து உதவிய பாரத சாரணீய சங்கத்தினருக்கு எங்களது நன்றி.

முற்பகல் சுமார் 11-30 மணிக்குள், சாம்பார், கூட்டு, இரசம் முதலியவற்றுடன் உணவு தயாராகிவிட்டது. பின்னர் மாணவர்களும் ஆசிரியர்

களும் ஒருங்கு அமர்ந்து உணவு அருந்தினோம். சிறிது நேரம் ஓய்வுக்குப் பின்னர், மாணவர்களும், ஆசிரியர்களும் பலவித விளையாட்டுகளில் கலந்து கொண்டனர். இளம் சிறார்கள் காற்றாடிகளை வானில் பறக்கவிட்டுக் களித்தனர். இங்ஙனமாக, மாலை 4-45 மணி வரை பொழுது இனிமையாகக் கழிக்கப்பட்டது. பின்னர் மாணவர்கட்கும் ஆசிரியர்கட்கும், சிற்றுண்டியும், தேநீரும் வழங்கப்பட்டன. அதன் பின்னர், ஆசிரியர்களையும், மாணவர்களையும் திரு. S. R. பாண்டியன் அவர்கள் அன்புடன் புகைப்படங்கள் எடுத்தனர்.

இதுபோன்ற வன போசன இயக்கங்கட்குப் போதிய ஆதரவு காட்டி, ஊக்கமளிக்கும் நம் பள்ளித் தலைவர் (Principal) அவர்களின் மாண்பினைப் பெரிதும் பாராட்டுவதோடு அவருக்கு நமது மனமார்ந்த நன்றியையும் செலுத்துவோமாக. நமது பள்ளியில் இது போன்ற இயக்கங்கள் பல ஏற்படுதல் வேண்டும். மாணவ சமூகத்தின் மூலம் மனித சமுதாயமே சீர் பெறும். இவ்வியக்கம் ஓர் சமூக சீர் திருத்தத்தை அதாவது சாதி சமய இன வேறுபாடுகளை அறவே களைந்தெறிவதற்கான வாய்ப்பினை அளிப்பதோடு சமத்துவம் ஒற்றுமை உணர்ச்சி சகிப்புத்தன்மை, நெருங்கிப்பழகல், பரந்த மனப்பான்மை, தன்னம்பிக்கை யுடைமை, கடமை உணர்ச்சி முதலிய நற் பண்புகள் பலவற்றை வளரவும் செய்யும்.

அன்று அந்திவானம் எழில் மிகுந்து தோன்றும் அந்த நேரத்திலே, அங்கிருந்த மயில் தனது வனப்பு மிகுந்த தோகையினை விரித்து காட்சி யளித்தது எங்களை வழியனுப்பவே அது அங்ஙனம் செய்தது என எண்ணினோம். மாலை 6 மணி யளவில் எல்லோரும் இல்லங்கட்குத் திரும்பினோம்.

த. கி. சுந்தரம், (இளையவர்)
இரண்டாம் படிவ ஆசிரியர்.

உத்தமர் காந்தியடிகள்

1. உண்மை உருக்கொண்ட உத்தமர்—எங்கள்
அண்ணல் காந்தி அடிகளின்,
மாண்பை மதித்திட முயன்றால்—இந்த
மாநிலம் முழுதையும் பண்ணலாம்!

2. அன்பும் அறமுங் கொண்டு—அவர்
அடிமைத் தளையினை அறுத்திட்டார்;
உண்ணா நோன்பினை உற்று—உயர்
எண்ணப் பண்பினை எழுப்பிட்டார்.

3. நிறவெறித் தீங்கினை நீக்கினார்—நல்ல
அறநெறிப் போரினை ஆக்கினார்;
பெரும்புகழ் பெற்ற பெரியார்—பல்வகை
அருஞ்செயல் ஆற்றிய அரியார்.

4. தீண்டாமைத் துன்பத்தைத் தீய்த்தார்—வெறும்
திண்ணைப் பேச்சினை மாய்த்தார்;
மண்ணில்தம் நலங்களை மறந்தார்—மிகத்
திண்ணிய திருவுளத்தோ டிறந்தார்.

5. தொழிலாளர் உழைப்பைப் போற்றினார்—வெள்ளைத்
துரையினர் பிழைப்பை மாற்றினார்;
தொழுத கையினன் வாய்த்தான்—தீயன்
கொழுதகைக் காந்தியைச் சாய்த்தான்!

9. அழுதவர் கண்ணீர் ஆறாயிற்று—அந்தோ!
எழுதுவார் எண்ணம் வேறாயிற்று;
மண்ணில் துன்பத்தை மாற்றுங்கள்—மக்காள்!
அண்ணல் நெறியினைப் போற்றுங்கள்.

இயற்றியோன் :
சோ. பழனிவேலன்,
ஆறாம் படிவம், 'உ' பிரிவு.

பாம்புக்குக் கால்

ஒருநாள் கோபு வகுப்பில் தமிழ் உபாத்தியாயர் பாம்பைப்பற்றி விளக்கமாகச் சொல்லி விட்டு ஒரு கட்டுரை எழுதச் சொன்னார். எல்லோரும் எழுதிக் காட்டினார்கள். கோபு முறை வந்தது. கோபு நோட்டைக் காட்டினான். உபாத்தியாயர் எதையோ கண்டவர் போல் "என்னடா கோபு! இப்படி தப்பா எழுதிருக்கே! பாம்பு என்று போடுவதற்கு பம்பு, பம்பு என்று எழுதலாமா" என்று கேட்டார். உடனே கோபு பளிச் சென்று, "நீங்கதானே சார் சொன்னீர்கள் பாம்புக்குக் கால் இல்லை என்று" என்றான். உடனே அவரும் மற்றப் பையன்களும் கொல்லென்று சிரித்தார்கள். பிறகு உபாத்தியாயர், டேய் மண்டு! கால் என்றால் துணை எழுத்து என்று நினைத்து விட்டாய். நான் சொன்னது, நமக்கிருப்பதைப்போல் பாம்புக்குக் கால் இல்லை என்றேன். புரிகிறதா! என்று சொன்னார்.

எஸ் ராஜகோபால்,
நான்காம் படிவம், 'உ' பிரிவு.

தாய் மொழி

உலகினி லொரு மொழி எதுபாப்பா
உயர்வான ஒருமொழியைச் சொல்லு பாப்பா
இலக்கண இலக்கியம் சிறந்ததானால்
இமயம் வரை பரவிய தெது பாப்பா
மெய்யுரை மொழிந்தமொழி எது பாப்பா
வெள்ளையர் புகழ்ந்த மொழி எது பாப்பா
வேதம் நிறைந்த மொழி எது பாப்பா
நம் முன்னோர் மொழி எது பாப்பா
நம் தாய் மொழி தமிழ் பாப்பா.

மு. சி. இராமசாமி,
ஆறாம் படிவம் 'உ' பிரிவு.

English Proverbs with Tamil equivalents.

1. Man proposes, God disposes.
   நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கிறது.
2. To rob Peter to pay Paul.
   கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்கிறது.
3. A little leak will sink a ship.
   ஆயிரக் கல நெல்லுக்கு ஒரு அந்துப்பூச்சி.
4. Familiarity breeds contempt
   பழகப் பழக பாலும் புளிக்கும்.
5. Barking dogs seldom bite.
   குலைக்கிற நாய் கடிக்காது.
6. Misfortunes never come single.
   பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்.
7. Perseverance kills the game.
   முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்.
8. Take care of the pence, the pounds will take care of themselves.
   ஒரு காசு பேணின் இரு காசு தேறும்.

9. Care will kill a cat.
மனக்கவலை பலக்குறைவு.

10 Do not throw pearls before swine.
கழுதையறியுமா கந்தகப் பொடி வாசனை.

11. Make hay while the sun shines.
காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

12. A stitch in time saves nine.
வெள்ளம் வருமுன்னே அணை போடவேண்டும்.

13. Charity begins at home.
தனக்கு மிஞ்சி தான தர்மம்.

14 I ask for a fork and you bring me a take.
பட்டுக்கோட்டைக்கு வழியேதென்றால் கொட்டைப்பாக்கு பத்து பணம் என்கிறான்.

15. A little stream will drive a lightmill
சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்.

16. Birds of a feather, flock together.
இனம் இனத்தோடு, வெள்ளாடு தன்னோடு.

17. The face is the index of the mind.
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

18. 'Tis good fishing in troubled waters.
சந்தடி சாக்கிலே கந்தகப்பொடி கால் பணம்.

G. P. DANARAJ,

கனவில் கண்ட காந்தியார்

1951—ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 24—ஆம் நாள் மாலை 4—30 மணிக்கு தஞ்சை தூய பேதுரு உயர்நிலைப்பள்ளியில் மணியின் ஒலி மூன்று முறை ஒலித்தது பள்ளி முடிந்துவிட்டதின் அடையாளமாக.

பள்ளி மாணவர்கள் யாவரும் கூட்டம் கூட்டமாகவும், வரிசை வரிசையாகவும் பகல் முழுவதும் உழைத்துவிட்டு அலுத்து வீடு திரும்பும் பாட்டாளி மக்களைப்போல் தமது தமது இல்லங்களுக்கு விரைந்து சென்று கொண்டிருந்தனர். அவர்களில் பாலனும் ஒருவன்.


MASTERS EDUCATIONAL TOUR
By S.R.P.

நீலவானமெங்கும் கருமேகப் படலங்கள் குவிந்து கிடந்தன. வையக மெங்கும் ஓர் மந்தாரப்பொழுது 'உஸ்ஸ்' என்று குளிர் காற்று ரீங்கார மிட்டுக்கொண்டிருந்தது வானமளாவிய பெரு மரங்கள் யாவும் 'ஹோ' என்று குலுங்கி அசைந்தாடின. பறவைகள் மூலைக்கு ஒன்றாகச் சிறகடித் துப்பறந்தோடின. இந்த இனிமையான நேரத்திலே மாலைக்கதிரவன் தன் வர்ண ஜாலங்களை அள்ளி வீசிக்கொண்டு மறைய ஆரம்பித்தான்.

பகல் முழுவதும் பள்ளியில் படித்தே பொழுதைப் போக்கிய பாலன் பொழுது போக்குவதற்காக இரண்டு, மூன்று புத்தகங்களைப் புரட்டினான். 'டம் டம்' என்ற டமார சப்தம் கேட்டுத் தன் கண்களை பலகணிப் பக்கம் திருப்பினான்.

தஞ்சை யாகப்பாவில்

" மிஸ்டர் பெல்டேவர் காலேஜ் செல்கிறார் "

என்ற சினிமாப்படம் நடக்கிறதாக வண்டியில் எழுதியிருந்தது. அப்பொ ழுதுதான் ஞாபகத்திற்கு வந்தது. அன்று ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனம் பற்றி வகுப்பு ஆசிரியர் இனிமையுடன் சொன்னதும், அதன் காரணமாக ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்திற்கு நிதியாக பள்ளியில் 'டிக்கட்' வாங்கி யதும். உடனே வீட்டில் அனுமதி வாங்கிக்கொண்டு சினிமா தியேட்டரை அடைந்தான் பாலன்.

மக்களின் கூட்டத்தை ஒரு முறை நோக்கினான். கூட்டம் அதிக மாகத்தான் இருந்தது. தியேட்டரில் இருந்தவர்கள் யாவரும் பள்ளி மாண வர்களும், மாணவிகளுமாக இருந்தனர். ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத் திற்காக நிதி செலுத்தும் பொருட்டு இத்தனை மாணவ மாணவிகள் மகிழ் வுடன் வந்திருக்கின்றார்களே என்ற மகிழ்வுடன் அமர்ந்திருந்தான் பாலன். மின்சார தீபங்கள் அணைந்தன. படம் ஆரம்பமாயிற்று. இன்னிசைக் கீதங்கள் அவனது இதயத்தைப் பிளந்தன. அங்கு நடந்த நாட்டியத்தைப் பார்த்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான். நடிகர்களின் உணர்ச்சி மிகுந்த சொற்கள் அவனது உள்ளத்திற்குள் ஊடுருவிச் சென்றன. நடிகர்களின் நடிப்பைப் பார்த்துப் பூரிப்படைந்தான்.

மூன்று மணிநேரம் படம் ஓடியதும் முடிவு பெற்றது. தியேட்டரில் இருந்தவர்கள் அனைவரும் வெளியில் வந்துகொண்டிருந்தனர். அவசர அவசரமாக வெளியில் வந்த பாலன் அங்கு நின்றுகொண்டிருந்த ஓர் ஆதித் திராவிடச் சிறுவன் மேல் கால் தடுமாறி விழுந்து விட்டான். விழுந்த மாத்திரத்திலேயே உடனே எழுந்து அவனைப் பார்த்துவிட்டு "ஜாதிமதம் இல்லாமல் சமமாக வழியில் நிற்கிறாயே" என்று தன் கொடூர மொழிக

ளால் கூறினன். மீண்டும் தன் கோபக் கனல் வீசும் கடுஞ் சொற்களால் அவனைத் துன்பத்திற்கு உள்ளாக்கிவிட்டு அந்த இடத்தைவிட்டு நகர்ந்தான்.

முகத்தில் ஏற்பட்ட வியர்வையைத் தன் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டு மெதுவாகத் தன் வீட்டை அடைந்தான். கால் கைகளைக் கழுவி விட்டு இரவு ஆகாரம் உண்டபின் முன் கூடத்தில் போட்டிருந்த கட்டிலில் படுத்துக்கொண்டான்.

பகல் முழுவதும் நெற்றிவேர்வை நிலத்தில் விழ உழைத்து அலுத்துப்போய் இரவில் தூங்குகின்ற பாட்டாளியைப் போல தூங்க ஆரம்பித்தான்.

அருமையான தூக்கம். தூக்கத்தின் காரணமாகக் கனவுகாண ஆரம்பித்தான். கனவு மூலமாக ஐந்து நதிகள் ஓடி அழகாகக் காணப்படும் பஞ்சாப் நாட்டைப் பார்த்தான். அணுகுண்டு கண்டுபிடித்த அமெரிக்காவைப் பார்த்தான். ரஷ்யாவைப் பார்த்தான். லண்டன் மாநகரத்தைப் பார்த்தான். சிங்கப்பூரைப் பார்த்தான். சிலோனைப் பார்த்தான். இந்தியாவைப் பார்த்தான். இந்தியாவின் சிகரமாக விளங்கும் இமயமலையைப் பார்த்தான். இமயமலையைப் பார்த்துவிட்டு மறுபக்கம் திரும்பினன். அவன் கண்முன் ஓர் உருவம் நின்றது. நல்ல சிவந்தமேனி. வாழ்க்கையிலே வதங்கிப்போன வயோதிகர். அவர் இடுப்பில் கட்டியிருந்த நான்குமுழத் துண்டு அவர் காந்தி தாம் என்று எடுத்துக் காட்டியது. உற்று நோக்கினன் பாலன். தலை நிமிர்ந்தார் காந்தியார். பேச ஆரம்பித்தார்.

"என் ஆருயிர் இளைஞனே! நன்றி! நான், நம் நாட்டில் ஜாதி மதம் என்ற பிரிவினை இருக்கக்கூடாது என்று எவ்வளவு பாடுபட்டேன். எல்லோரும் ஓர் குலம் என்று பிரசாரம் செய்தேனே! எவ்வளவு தூரம் கஷ்டப் பட்டேன் ஜாதி மதத்தை ஒழிக்க! அப்படி யிருந்தும் இன்று நீ சினிமாக் கொட்டகையில் உன்னைப் போன்ற ஓர் இளைஞனை ஆதித்திராவிடன் என்று பேசித் திட்டினையே, அவன் ஆதித்திராவிடன் என்றால் ஒதுக்கி வைத்து விடுவதா? அவனும் உன்னைப்போல் ஒரு சிறுவன்தானே? தம்பி! நீயே சிந்தித்துப்பார்! இது நியாயம் தானு?" என்று தனக்கே உரிய சாந்த மொழிகளால் கூறினர்.

பாலன் பேசமுடியாமல் தவித்தான். காந்தியாரின் பாதங்களைத் தன் இரு கைகளாலும் இறுகப் பிடித்துக்கொண்டு "ஐயோ! பாட்டாளியின் பாதுகாவலனே! இந்தியாவின் இன்பத் தந்தையே! புதுமனம்பூண்ட புத்துலகப் பெருமானே! குற்றம் செய்தவன் கொற்றவனுக இருந்த பொழுதிலும் கண்டிக்க கலங்காத உள்ளம் கொண்ட உத்தமனே! சுதந்திரம்

வாங்கித்தந்த சாந்த சொரூபியே! மக்களின் மாணிக்கமே! நான் செய்த தவறுதல்களை எல்லாம் மன்னிப்பீர்களா?" என்று காந்தியாரின் கால்களில் விழுந்த வண்ணம் கெஞ்சினான்; அழுதான்; கண்ணீர் சிந்தினான். அவனது கண்களில் இருந்து வரும் கண்ணீர் அவனது இதயத்தில் இருந்து வரும் இரத்தமாகக் கருதினான்; வேல்பட்ட நெஞ்சம்போல் துடிதுடித்தான். "நாட்டுக்கு அளித்த திட்டத்தை மறந்து அதை மட்டம் தட்டிய நான் இனிமேல் இருந்தாலென்ன? இறந்தாலென்ன?" என்று கூறிக்கொண்டு தரையில் வெட்டுண்ட மரம்போல் சாய்ந்தான். தலையணையும் அவனுடன் சாய்ந்தது. கண் விழித்தான் பாலன். நாம் கண்டது கனவுதானா? கனவாக இருந்தபொழுதிலும் நாம் செய்த குற்றத்திற்கு மன்னிப்புப் பெற்று விட்டோமா? என்று தலை தூக்கினான். சுவரில் மாட்டியிருந்த காந்தியாரின் படம் காலைக்காற்றின் அசைவால் அசைந்து காட்சி அளித்தது. உடனே எழுந்து வணங்க ஆரம்பித்தான்.

> "என்று நீ செய்த குற்றத்தை உணர்ந்தாயோ அன்றே நீ
> மன்னிப்புப் பெறுவாய்"

என்ற காந்தியாரின் பொன்மொழி அதில் பொறிக்கப்பட்டிருந்ததை மனதில் பதித்துக்கொண்டான்.

ஆறுமணிக்கே எழுந்திருந்த அவனது தாயார் ஓடிவந்து "என்னப்பா செய்கிறாய்?" என்று இனிய மொழிகளில் கேட்டாள். உடனே பாலன் "கனவில் காந்தியைக் கண்டேனம்மா?" என்று உற்சாகத்தோடு கூறினான்.

குறிப்பு :— இதில் வரும் பெயர் யாரையும் குறிப்பிடுவதன்று.

மு. அழகிரிசாமி,
ஐந்தாம் படிவம், அ. பிரிவு,
தூய பேதுரு உயர்நிலைப் பள்ளி,
தஞ்சாவூர்.

நகை வெடி

1. எஜமானர்:—(புதிதாக வேலைக்கு வந்த ஆளைப் பார்த்து) ஏம்பா, நீ முன்னாலே இருந்த இடத்திலே ஏதேனும் திருடி னது உண்டோ?

வேலையாள் :— வேலூர் ஜெயிலிலேயிருந்தேங்க. அங்கே .... திருட வழி இல்லீங்க.

2. தகப்பனார் :—என்டா ! நான் ஒரு வேஷ்டி கிழிச்சா, நீ ஒன்பது வேஷ்டி கிழிக்கிறாயே?

மகன் :— நீங்கள் தானே அப்பா 'மான் எட்டடி பாய்ந்தால் அதன் குட்டி பதினாறடி பாயும்' என்று சொன்னீர்கள்.

3. ஒருவர் :— பெண்களை ஏன் "பெண்மணிகள்" என அழைக் கிறார்கள் ?

மற்றவர் :— அதுவா? அவர்கள் பெயரே மணிகள்தானே ! 'சிந்தாமணி—சூடாமணி!

எஸ். ராஜகோபால்,
4-ம் படிவம், உ. பிரிவு.

விடுகதைகள்

1. பட்டுக் குடையைப்போல பூப்பூக்கும், பறிக்கப்போனால் எட்டாது.
2. ஆழக்குழி வெட்டி அதிலே ஒரு முட்டையிட்டு அண்ணாந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை.
3. யாருமிறங்காத குளத்தில் ஓர் அன்னம் உலவுகிறது!
4, பச்சை ஜன்னல் வெள்ளை தோப்பா கறுப்புச்சாமி உள்ளே தூங்குகிறான்.
5 சென்னப்பட்டணம் சிகப்பு சீரங்கப்பட்டணம் கறுப்பு உடைத் தால் பருப்பு தின்று பார்த்தால் கசப்பு.
6. மாலுமிக்கு வழிக்கருவி மாதருக்குத் தொழிற் கருவி.
7. நெருப்பிலே பிறந்து நீரிலே மூழ்கி வாயிலே வந்து வானத் தில் போகிறவர் யார் ?
8. காற்று நிறைந்த பை இது. கால் பட்டால் ஓடும் அது.
9. மேலே ஓடு உள்ளே சதை எது ?

எஸ். ராஜகோபால்,
4-ம் படிவம், உ. பிரிவு.

(விடை :—52-ம் பக்கம் பார்க்க.)

சிறுவர் செஞ்சிலுவைச் சங்கம்,

தூயபேதுரு நடுத்தரப் பள்ளி,

கீழவாசல், தஞ்சாவூர்.

மந்திரி சபை :—

ஆலோசகர் :—S. சிதம்பரம் (ஆசிரியர்)

1. பிரதம மந்திரி :—S. நீலகண்டன்.
2. வைத்திய மந்திரிகள் :—(1) R. சீனிவாசன்.
(2) S. சிவப்பிரகாசம்.
3. மாணவர் சுகாதார மந்திரிகள் :—
(1) J. அல்லாவுதீன்.
(2) B. செல்வதுரை.
(3) P. மாணிக்கவாசகம்.
(4) A. நூர்அகமத்.
4. பள்ளிக்கூட சுகாதார மந்திரிகள் :—
(1) D. சீனிவாசன்.
(2) M. தங்கவேலு.
(3) G. கலியமூர்த்தி.
(4) N. ரெத்தினசபாபதி
5. ஒழுங்கு மந்திரிகள் :—
(1) N. பன்னீர்ச்செல்வம்.
(2) M. ஜெயபாலன்.
(3) R. செல்வராஜன்.
(4) M. அப்துல்அஸிம்.

சிறுவர் செஞ்சிலுவைச் சங்கம்.

செஞ்சிலுவைச் சங்கம் :—போர்க்களத்தில் அடிபட்ட வீரர்களின் பரிதாப நிலையைக்கண்டு, அவர்களின் துன்பங்களை நீக்குவதற்காக ஹென்றி டியுனண்ட் (Henry Dunent) என்ற பெரியார் ஒருவர் கி. பி 1864-ஆம் ஆண்டில் இச் சங்கத்தை ஆரம்பித்தார். இச சங்கத்தின் முக்கிய நோக்கங்கள், சண்டைக் காலங்களில் காயம்பட்ட போர்வீரர்களுக்கு உதவிசெய்தல் ; சமாதான காலங்களில் சுகாதாரத்தை வளர்த்தல், நோயாளி

களுக்கும் துன்புற்றவர்களுக்கும் உதவிசெய்தல், சர்வதேச நட்பை உண்டாக்குதல் என்பனவாம் இச் சங்கத்தில் அரசியல், ஜாதி, மதம், நிறவேறுபாடே கிடையா.

சிறுவர் செஞ்சிலுவைச் சங்கம்:—1914-ஆம் ஆண்டில் முதல் உலக மகாயுத்தம் தொடங்கியபோது, கனடாவில் க்யூபெக் மாகணத்தில் முதன் முதலில் இச் சிறுவர் செஞ்சிலுவைச சங்கம் ஏற்படுத்தப்பட்டது. இது 1925-இல்தான் இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டது. இது பள்ளிக்கூடங்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டது. இச் சங்கத்தில் 18 வயதிற்குட்பட்ட பள்ளி மாணவ மாணவிகள் கலந்துகொள்ளலாம். இச் சங்கத்தின் நோக்கங்கள் சுகாதாரத்தை வளர்த்தல், பிணியாளருக்கும துன்புற்றவர்க்கும் உதவிசெய்தல், ஒற்றுமையை வளர்த்தல் என்பனவாம்.

மேற்கூறப்பட்ட சிறுவர் செஞ்சிலுவைச சங்கம் ஒன்று 9—1—53 வெள்ளி நன்னாளில் நம் கிழவாயில் கிளைப்பள்ளியில் ஏற்படுத்தியுள்ளோம். இச் சங்கத்தில் சேர கட்டணமோ அல்லது சீருடையோ (uniform dress) கட்டாயமில்லாததினால் அநேக மாணவர்கள் இதில் கலந்துகொண்டார்கள். தற்போது சுமார் 90 அங்கத்தினர்கள் இருக்கின்றனர்.

இச் சங்கம் மாணவர்களாலேயே நடத்தப்படவேண்டுமாதலால், அவர்களுக்குள் தலைவர் உப தலைவர், காரியதரிசி, நிதியாளர், பதினொன்று கமிட்டி அங்கத்தினர்கள் ஆகியோரை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஒரு ஆசிரியர் மட்டும் இவர்களுக்கு ஆலோசகராக (counsellor) இருந்து சங்கம் வெற்றிகரமாக நடக்க ஆலோசனைகூறி உதவி செய்கிறார்.

தலைவர்கள் இருவரும் சங்கத்தைப் பொறுப்புடன் கவனித்து நடத்தி வருகிறார்கள். காரியதரிசி கூட்டம் கூட்டுதல், அறிக்கை எழுதுதல் முதலிய தன் காரியங்களைச செவ்வனே செய்து வருகிறார். சங்கத்தின் அங்கத்தினர்களோ, மற்ற மாணவர்களோ, பெரியோர்களோ மனமொப்பிக் கொடுக்கும் சிறு நன்கொடைத் தொகைகளை நிதியாளர் வசூலிக்கிறார். இச்சிறு தொகையைச் சங்கத்தின் ஆக்கவேலைகளைச் செய்யவும், முதல் உதவிக்கு மருந்துகள் வாங்கவும், கமிட்டி தீர்மானிப்பதுபோல், செலவு செய்கிறார். வாரம் ஒன்று அல்லது இரண்டு கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. எல்லோரும் உற்சாகமாக கலந்துகொள்கிறார்கள்.

இச் சங்க நோக்கங்களின் காரியங்களைப் பிரித்துப் பணியாற்ற, மேற்கூறப்பட்ட 15 உத்தியோகஸ்தர்களையும் கொண்டு ஒரு மந்திரி சபை அமைக்கப்பட்டிருக்கிறது.

சங்கத்தின் தலைவரே மந்திரி சபையில் பிரதம மந்திரியாக இருக்கிறார். இரண்டு வைத்திய மந்திரிகள் உள்ளனர். இவர்கள் முதல் உதவிக்கு வேண்டிய பொருள்களைக் கவனித்துக்கொள்கிறார்கள்; வேறு சில சிறு மருந்துகளையும் அவசியமானபோது மாணவர்களுக்கு அளித்து வருகிறார்கள்.

மாணவர் சுகாதார மந்திரிகளாக நால்வர் இருக்கின்றனர். இவர்கள் மாணவர்களின் சுகாதாரத்தைக் கவனித்துக்கொள்கிறார்கள். இவர்கள் காலையில் பள்ளிக்கு வந்தவுடன், எண்ணெய் தடவி சீவாத மாணவர்களுக்கு, எண்ணெய், கண்ணாடி, சீப்பு முதலியவைக் கொடுத்து சீவச் சொல்லுகிறார்கள். இதற்கான எண்ணெய், கண்ணாடி, சீப்பு முதலிய பொருள்கள் சங்கத்திலிருந்து வாங்கியளிக்கப் பட்டிருக்கின்றன. கைவிரல்களிலுள்ள நகங்கள் அசுத்தமாகவும், வளர்ந்தும் உள்ள மாணவர்களை அழைத்து நகங்களை வெட்டிவிடுகிறார்கள். முக்கியமான சில சந்தர்ப்பங்களில் அதிக அழுக்குள்ள ஏழை மாணவர்களுக்குச் சிறு சோப்புத்துண்டுகளும் அளிக்கிறார்கள்.

பள்ளிக்கூட சுகாதார மந்திரிகளாக நால்வர் இருக்கின்றனர். இவர்கள் வகுப்பு அறைகளிலுள்ள படங்கள் சரியாக மாட்டப்பட்டிருக்கின்றனவாவென்றும், பெஞ்சு நாற்காலி முதலியவைகள் நேராகவும், சுத்தமாகவும் இருக்கின்றனவாவென்றும், கண்ட இடங்களில் குப்பைகள் இல்லாமலும் கவனித்துக் கொள்கிறார்கள். விளையாடுமிடத்தையும் தோட்டத்தையும் கவனித்துக் கொள்கிறார்கள். குடிதண்ணீர் வசதியைக் கவனிக்கிறார்கள். கக்கூஸ் முதலியவை சுத்தமாக உள்ளதாவென்று கவனித்து, அப்படி இல்லையாயின் ஆலோசகரிடம் தெரிவித்து வேண்டியதைச் செய்கிறார்கள்.

ஒழுங்கு மந்திரிகள் நால்வர் இருக்கின்றனர். இவர்கள் மாணவர்களின் ஒழுங்கு முறைகளைக் கவனிக்கிறார்கள். கடவுள் வணக்கத்திற்குச் செல்லும்போதும், திரும்பிவரும்போதும், வகுப்பறையில் இருக்கும் போதும், ஆசிரியரிடம் பழகும்போதும், விளையாடும்போதும் எல்லோரும் ஒழுங்குடன் நடந்துகொள்வதைக் கவனிக்கிறார்கள். சிறிது ஒழுங்குமீறி நடப்பவர்களை அன்பாகச் சொல்லித் திருத்துகிறார்கள். இந்த விஷயத்தில் ஆலோசகர் அதிக உதவி அளிக்கிறார்.

இதல்லாமல் இச் சங்கம், சர்வதேச நட்பு என்ற நோக்கத்தை நிறைவேற்றவும், வெளிநாடுகளின் தொடர்புகொள்ளவும் ஒரு (Stamp Album) தபால் வில்லை புத்தகம் தயார்செய்து வருகிறது.

இவ்விதம் இச் சங்கம் தொண்டாற்றி வருகின்றது. இது மாகாண செஞ்சிலுவைச் சங்கத்தோடு பதிவுசெய்யப்பட்டு, சாக்ஷி பத்திரமும் (Cctificate) பெற்றிருக்கின்றது. சென்னை செஞ்சிலுவைக் காரியாலயத்திலிருந்து "Madras Junior" என்ற கால் ஆண்டு தமிழ் பத்திரிகை ஒன்று இலவசமாக வந்துகொண்டிருக்கின்றது.

S. சிதம்பரம்,
ஆலோசகர்.

கலையும் களைப்பும்

(கவிதை)

இன்பமது பொங்கிடவே எழுந்ததென்றல்
இமையதனில் பட்டிடவே விரைவிலிங்கு
துன்பமதைப் போக்கிடவே வந்ததென்று
துவண்டிட்ட உள்ளமது துதி பாடிற்று
முன்னமது மனதினிலே நினைத்ததெல்லாம்
முன்கூட்டி விரைவினிலே வந்ததைப்போல்
எண்ணமெலாம் எழுச்சியுற்று இணைந்துகூடி
இயங்கிடவே எழுந்து சென்றேன் காற்றைப்போல் !
தஞ்சைக்கீழ் மூன்று கல் தொலைவினிலே
தனி எழிலாய் சிறப்புற்று தழைத்து நிற்கும்
புஞ்சை சூழ் மாரியம்மன் கோவில் தன்
புகழ்தனைப் பெரு நோக்காய் கண்டு வர
வெஞ்சுடராய் அம்மைதனை விரைந்து காண
வெள்ளமிகு உள்ளமுடன் உள்ளே சென்றேன்
நெஞ்சையள்ளும் கலைத்திறமை கண்டேன் அவண்
நீணிலத்தில் கண்டதில்லை அஃதேபோல் !
களைப்பதைப் போக்கிடவே அவணமர்ந்தேன்
கலையெல்லாம் கண்டபின்பு கால் நோதீர
நிலைபெற்ற கலையமுதை ஆக்கித்தந்த
நிர்வாகி நினைப்பினிலே நீளும் நெஞ்சில்
மலைமலையாய் எண்ணங்கள் சுழன்று வீழ
மதியம் வந்து நிலைகூற மனம்விழித்து
அலையலையாய் எழும் எண்ணம் அறுந்துவீழ
அதிவிரைவாய் அவண்விட்டு அகன்றுவிட்டேன்.

இயற்றியோன்:-
த. சு. கேசவன்,
ஆறும் படிவம், 'இ' பிரிவு.



The Masters' Volley Ball Team.
Runners in the District Tournement.

The Boys Drawing water for the
Garden (East-Gate).



The D.E.O., The Principal, and
Mr Venkataraman watching the
Demonstrations.



Cyclone havoc

சாரணர் பாடி வாழ்க்கை.

1952-ம் ஆண்டு நவம்பர்-மீ 29உ 6 சாரண ஆசிரியர்களும் 46 சாரணர்களும் குருளையர்களும் பண்டிதர் தோட்டம் சென்று பாடி வாழ்க்கை நடத்தினார்கள், பாடி வாழ்க்கையில் பங்கெடுத்துக்கொண்ட சாரண ஆசிரியர்கள் :—

திருவாளர் G. தேவ இரக்கம்
" T. K. சுந்தரம் அய்யர்
" P. R. சுப்பிரமணியம்
" V. பாணுல் இராஜாராம்
" V. இராஜகோபாலன்
" S. நாராயணசாமி

2. பள்ளி அரண்மனை விளையாட்டு மைதானத்தில், காலை 7 மணிக்கு ஆசிரியர்களும் சாரணர்களும் ஒருங்கே கூடி பாடி வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டு 8½ மணிக்கு தோட்டத்தை அடைந்தார்கள். சென்ற உடன் சாரணர்களையும் குருளையர்களையும் அணி அணியாகப் பிரித்து அவர் அவர்களுக்கு இடம் கொடுக்கப்பட்டது. 9-மணிக்குப் பள்ளித் தலைவர் திருவாளர் ஜே. ஜி. கோயில் பிள்ளை அவர்களை Group Leader திருவாளர் T. K. சுந்தரம் அய்யர் அவர்கள் வரவேற்றார். தலைவர் கொடியேற்று விழாவை நடத்தி முகாமைத் திறந்து வைத்தார். தலைவரவர்கள் சாரணீயத்தில் சிற்சில குறைபாடுகள் இருப்பதாகவும் அந்த இயக்கத்தில் உயர்ந்த பதவியிலுள்ளவர்கள் அதைப் போக்க முயற்சிக்க வேண்டும் என்றும், இவ்வாறு பாடி வாழ்க்கை மாணவர் நன்மை அடையும்படி அடிக்கடி நடத்தப்பட வேண்டும் என்றும் கூறினார். மேலும் தலைவர் அவர்கள், தான் பள்ளியில் பயிலும் காலை பள்ளியில் சாரணீயம் என்பதே கிடையாது என்றும், ஆகையால் தற்காலப் பள்ளி மாணவர்கள் சாரணீயத்தில் சேர்ந்து பெரும் பயனைத் தான் பெற இயலாமற் போனது குறித்துத்தான் வருந்துவதாகவும் கூறினார். பிறகு 12மணி வரை சாரணர்களுக்கும் குருளையர்களுக்கும் தனித்தனியே பாடங்களும் பயிற்சிகளும் நடத்தப்பட்டன. அரை மணி நேரம் குளிப்பதற்காகக் கொடுக்கப்பட்டது. 1 மணிக்குப் பகல் உணவு அளிக்கப்பட்டது. பள்ளித் தலைவர் சாரணர், குருளையர், ஆசிரியர்களுடன் முகாமில் உணவு உட்கொண்டார். இது எங்களுக்கு மிக மகிழ்ச்சியைக் கொடுத்தது.

3. பிற்பகல் நிகழ்ச்சிகள் 2 மணிக்கு ஆரம்பமாயிற்று. அப்பொழுது சாரணர்களுக்கு Bandage, தீ மூட்டுதல், Scout pace 'விளையாட்டுக்கள்

முதலியவைகளும், குருளேயர்களுக்கு மௌக்ளிக் கதை இரண்டாம் பாகமும் மூன்றும் பாகமும், Salute, தேசியக்கீதம், ஷர்க்கான் நாட்டியம், செய்தி அனுப்புதல், விளையாட்டு முதலியனவும் அங்குள்ள சாரண ஆசிரியர்களால் நடத்தப்பட்டன. 4½ மணிக்கு எல்லோரும் தேனீர் அருந்தினர். இரவு 8 மணிக்கு இரவு சாப்பாடு அளிக்கப்பட்டது. 8¼ மணிக்குப் பாடித்தீயை உண்டாக்கி Camp fire நடந்தது. திரு. T. K. சுந்தரம் அய்யர் அவர்கள் பாடித்தீயை ஆரம்பித்தார். சாரணர்களும் குருளேயர்களும் சாரண ஆசிரியர்களும் மகிழ்ச்சியும், நகைச்சுவையும் தரக்கூடிய பல விஷயங்களை நடித்துக் காட்டினர். 10 மணிக்கு விளக்கு அணைப்புச் சைகை கொடுக்கப்பட்டது.

4. 30–11–52 மறுநாட்காலை எல்லோரும் 9 மணிக்கு எழுந்திருந்தனர். திரு P.R. சுப்பிரமணியம் அவர்கள் மேற்பார்வையில் மாணவர்களுக்கு உடற்பயிற்சி அப்பியாசங்கள் நடந்தன. பிறகு எல்லோரும் பாடி வாழ்க்கை நடத்திய இடங்களைச் சுத்தம் செய்து பின் புறப்பட்டார்கள். அன்றுதான் சமீபத்தில் அடித்த புயல் ஆரம்பமாயிற்று. நாங்கள் புறப்படும்பொழுது சிறிது மழை இருந்தது. ஆண்டவன் அருளில் நாங்கள் எல்லோரும் இருப்பிடம் வந்து சேர்ந்தபின்தான் புயலின் கோரம் அதிகரிக்க ஆரம்பமாயிற்று.

5. Troop Leader லோகநாதன் என்னும் மாணவர் சில புகைப்படங்களை எடுத்தார். பள்ளித்தலைவர் திருவாளர் ஜே ஜி. கோயில் பிள்ளை அவர்கள் அவர்களுடைய அலுவல்களையும் கவனியாது சிறுவர்களோடு கூடிக் குலாவுவதே சிறந்த மகிழ்ச்சி தரக்கூடிய செயல்களில் ஒன்றாகும் என்ற நேருஜீயைப் போல் சிறந்த எண்ணங்கொண்டு அன்று (29–11–52) எங்களோடு உண்டு களித்து அரை நாளைக்குமேல் முகாமிலேயே தங்கி இருந்தது எங்களுக்கு பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. Group Leader திரு. T.K. சுந்தரம் அய்யர் முகாம் கலையும்போது சாரணர்கள், குருளேயர்கள் நடந்துகொண்ட ஒழுங்கு நேர்மை முதலியவைகளைப் பெரிதும் புகழ்ந்தார். சாரண ஆசிரியர்களின் ஊக்கத்தையும் ஒத்துழைப்பையும் போற்றினார். முகாம் இனிது முடியப்பொருள் உதவிய பள்ளித்தலைவர் திருவாளர் ஜே. ஜி. கோயில்பிள்ளை அவர்களுக்கும் குழுவின் சார்பாக எங்கள் வந்தனம் உரித்தாகுக. மேலும் தோட்டத்தில் வசதியோடு இருக்க உத்தரவளித்த டாக்டர் ஜோதி பாண்டியன் அவர்களுக்கும் எங்கள் நன்றி. மானுசப்பட்டி கண்டிராக்டர் தி. கு. கோவிந்தராஜா வாருண்டாருக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

S. NARAYANASAMY,
Cub Master, 1st. St. Peter's Tanjore

மகிழ்ச்சிச் செலவு. (மன்னை)

உலகம் தோன்றிய நாள்முதலாக அறிவு வளர்ந்துகொண்டே வருகிறது என்பது கண்கூடு. ஒரு காலத்தில் ஐந்தறிவுடைய விலங்குகளோடு விலங்காக வாழ்ந்த மனிதன் தன் அறிவின் துணைகொண்டு இன்று கணக்கிலாக் காட்சிகளைக்கண்டு இன்பமாக வாழ்கிறான். அக் காட்சிகளில் தலையாயது மகிழ்ச்சிச் செலவு.

மாணவ உலகிலே இன்பம் தருவது அச் செலவே. இதன் பொருட்டே ஏகினோம் மன்னைக்கு மாணவர்களுடன். ஆசிரியர் ஒருவர் வழிகாட்டப் பின்தொடர்ந்தோம். அதை நினைக்குங்கால் உளத்தில் உதிக்கிறது எல்லையிலா இன்பம். புறப்பட்ட நேரம் காலை, மாலை, மதியம், இரவு இவைகளில் எதுவுமில்லை. சரியாக 2–15 (பகல்) மணிக்கு. அப்பொழுது வெயிலின் வெப்பம் நிலவு நெளிவது போன்றிருந்தது. புகை வண்டியில் செல்லுங்கால் பொன்னிறப் பறவைகளின் இன்னொலி, இனிய தென்றல், வண்டியின் கீதம் அதற்கிடையே மாணவர்களின் மகிழ்ச்சியில் ஊறிய பாட்டும், கூத்தும் காணக் கண்ணிரண்டும் போதா. வண்டி மாற்றுவான்வேண்டி அங்குமிங்கும் அலைந்த மாணவர்களை ஒன்று திரட்ட உதவியது தலைவரின் புகைப்படப் பிடிப்பு. அடுத்த வண்டியில் ஆனந்தத்துடன் ஏறி மாலை இளங்கதிர் மலர் சொரிய, மாண்பிலா மக்கள் எதிர் நோக்க, வானளாவிய மாடங்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்க ஏகினோம் எழில் நகர் மன்னைக்கு.

மன்னை மாண்புமிகக நகர். எழில்மிக்க இளஞ்சோலை, வளமான நாடு அதில் வளைந்து வளைந்து செல்லும் ஆறுகளும் வாய்க்கால்களும் உள்ளன. வாய்க்கால்களின் இருமருங்கும் வயல்களில் நெற்கதிர்கள் பொற்கதிர்களெனப் பொலிந்தன. ஆற்றங்கரையே அருமையான சாலையாக அமைந்துளது. நகரில் எங்கு நோக்கினும் கோபுரங்களும் குளங்களும், பலதரப் பள்ளிகளும் நிறைந்திருந்தன.

எதிர்காலச சமுதாயத்தை இன்பமுடன் உருவாக்கும் இளஞ்சிறார்கட்கு இன்பமான போட்டி விளையாட்டுக்கள் நடைபெற்றன. கலந்துகொண்ட மாணவர்களின் ஆட்டமும் ஓட்டமும் ஆனந்தத்தை உண்டாக்கின. புகைப்படம் எடுத்தவர்கள் எத்தனையோ பேர். ஆட்டமுடிவில் கண்களுக்கோர் விருந்தாக இருந்தது பரிசு வழங்கல். கணக்கிலார் காட்சிகளைக் கண்டு களிப்புக் கடலிலேமூழ்கித் திரும்பினோம். திடமுடனே துன்பம்

துடைக்க, இன்பம் நுகர, கவலையைப் போக்க, அறிவு வளர, மனம் அமைதி பெற, ஒற்றுமை வளர, ஒழுங்கு ஓங்க மாணவர்கட்கு இப் பயணங்கள் தேவை. இதைப்போன்று இன்னும் எத்தனேயோ பயணங்கள் பள்ளி மாணவர்கட்குத் தேவை. வளர்க இன்பச் செலவு.

பஞ்சநதம் வி.
3-ஆம் படிவம், அ. பிரிவு.
கீழவாயில், தஞ்சை.

தமிழக முரசே !

தமிழ்நற் றிருநாள் பொங்கவென
கொட்டு முரசே
தமிழ் மணத்தைத் தாரணியில் வீசுதற்குக்
கொட்டு முரசே
அமிழ்தமெனுந் தமிழினிமை அகிலமுண்ண
கொட்டு முரசே
தமிழினிமை மலேச்சிறையில் பிழிந்ததென
கொட்டு முரசே
இனிமையுடன் தமிழோதி மாந்தர் வாழக்
கொட்டு முரசே
புறக்கணியாய் புதுவாழ்வைத் தமிழர் வாழ
கொட்டு முரசே
அரக்கனெனுந், தீப்பண்பைத் தமிழர் விடக்
கொட்டு முரசே
தொல் சிறப்பான் தமிழர்-மாண்பை மீட்பதற்குக்
கொட்டு முரசே
தமிழ் நாட்டில் தழைத்தோங்கித் தமிழர்வாழக்
கொட்டு முரசே
தமிழ் முரசே இவையாவும் மெய்யென்றே
கொட்டு முரசே.

மு. சி. இராமசாமி.
கு. சண்முகம்,

விடைகள்.

1. சந்திரன் 2. தென்னை மரம் 3. அசப்பை 4. சிதாப்பழம் 5. குண்டுமணி 6. ஊசி 7. சுருட்டு 8. பந்து 9. ஆமை.

நகைச்சுவை

1. ஆசிரியர் :— 'டேய் கிட்டு நம் நாட்டில் உற்பத்தியாகும் இரண்டு வகைக் கார்களைக் கூறு.'
கிட்டு :— 'நாயுடுகார், ஐயங்கார் சார்.'

2. ஆசிரியர் :— 'எய் தென்னை மரத்திலே ஏண்டா ஏறுரே.'
கிட்டு :— கஞ்சி குடிக்கங்க.
ஆசிரியர் :— அங்கே எங்கடா கஞ்சி இருக்கு.
கிட்டு ;— இல்லீங்க இங்கே கள்ளு கட்டப்போறேன்.
ஆசிரியர் :— டேய் உன்னைப் பிடித்துக் காவலில் போடுவார்களே!
